
உ

குகமயம்

# கதிர்காம மான்மியம்



ஆக்கியோன்


**அ. சின்னையாசிவம்**

ஆசிரியர்,

விவேகாநந்த வித்தியாலயம்,

34, மேட்டுத் தெரு, கொழும்பு-13.

*(Copyright-Reserved)*



கதிர்காம க்ஷேத்திரம்.

மாணிக்கப் பிள்ளையார் — கதிர்வேல் சந்நதி

## FOREWORD.

*It is in compliance with the kind request of Mr. A. Chinniah-Sivam—a teacher at the Vivekananda Vidyalayam, Colombo—that I have written this brief foreword to his booklet, the title whereof is " The glory of Kataragama."*

*A careful perusal of the book did enable me to observe its title suitably worthwhile; the language used to express the ideas very beautiful and the contents not only abundantly rich, but also very interesting, informative, and impressive.*

*Mr. Sivam has through this book presented the glory of the Shrine at Kataragama in the form of a real picture, visible even to the distant eyes.*

*The tens-of-thousands of the devotees on pilgrimage will find in this book, a great boon for their inspiration as well as for the augmentation of their faith and piety.*

*The author deserves every encouragement at the hands of Muruga-Worshippers.*

**S. Sundaram Swami**

*Sivagurunathapeedam,*
*Kanthurmadam,*
*Jaffna.*
*25-12-53.*

*To whom it may concern.*

*I understand that **Mr. A. Chinniah Sivam** has written a book on "The glory of Kataragama," I hope that this book will be a boon to all devotees who wish to know the significance of that sylvan shrine which is visited by thousands of devotees every year. I wish him all success in this noble endeavour.*

**Swami Natarajananda,**
*General Manager of*
*Ramakrishna Mission Schools.*

*Batticaloa,*
*5-4-53.*



உ

16—6—51.

**கலாநிதி, க. கணபதிப்பிள்ளை அவர்கள்**
பேராசிரியர், இலங்கைப் பல்கலைக் கழகம்,
கொழும்பு.

# மதிப்புரை

ஆசிரியர் சின்னையா சிவம் அவர்கள் எழுதிய "கதிர்காம மான்மியம்" என்னும் இந்நூல் என் பார்வைக்கெட்டியது. முருகப் பெருமான் திருவீற்றிருக்கும் சிறந்த திருப்பதிகளுள் ஒன்றாகிய கதிர்காமத்தைப்பற்றியும், ஆங்கு அப்பெருமானுக்கு நடக்கும் திருவிழா முதலியவற்றைப் பற்றியும் இஃது அழகாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறும்.

அத்திருப்பதியை அடைந்து அறுமுக அண்ணலின் அருளைப் பெற விழைந்து நிற்கும் அடியார்குழாத்துக்கு இந்நூல் அரும்பயன் அளிக்கும்.

**க. கணபதிப்பிள்ளை**

கருணையே உருவான கந்தனின் திருநாமத்தை வானளாவ உச்சரித்து முழக்கிக்கொண்டு "அரோஹரா" என்ற கோஷத்துக்கிடையே இருவினை தகர்க்கும் மாணிக்க கங்கையில் பக்தர் கூட்டம் மூழ்கி எழுந்திருக்கும் சமயத்தில், கொழும்பு நகரத்தில், றேடியோவில் கதிர்காம மான்மியத்தைப்பற்றி எதிர்பாராதவிதமாக ஒரு சொற்பொழிவு ஒலிபரப்பத் "திருவருள் பாலித்தது" என்ருல் இதைவிடக் கண்கண்ட சாட்சியை வேறெங்கும் சாதாரணமாகக் காணமுடியாது.

மேற்சொன்ன காரணம் ஒன்றுக்காவது, தென்னிலங்கையில் சிறப்புற்ருேங்கும் சுப்ரமண்யஸ்தலமாகிய திருக்கதிர்காமத்தின் மான்மியத்தைப் பற்றிய இக்கட்டுரை, கடந்த தீர்த்தோற்சவத்தின்போது அதே முகூர்த்தத்தில் **றேடியோவில்** ஒலிபரப்பத் திருவருள்பாலித்த இவ்வரலாறு, தெய்வானுக்கிரகம் நிறைந்ததென்பதும், இதனை முருகனடியார்கள் உவந்து வரவேற்பார்கள் என்பதும் எமது நம்பிக்கை.

குன்றுதொருடலில் என்றும் இன்பம்காணும் குமரவேள் அடியார் பொருட்டாக ஆனந்தமாய் ஆடிக்கொண்டேயிருக்கும் திருக்கதிர்காம மான்மியத்தைப்பற்றி எத்தனையோ அறிஞர்கள் எத்தனையோ எழுதியிருக்கிருர்கள். இறைவன் திருநாமத்தைச் சொல்லச் சொல்லத் தெவிட்டாதாகையால், அவ்விறைவன் உறைபதியைப்பற்றியும், அதன் மான்மியத்தைப்பற்றியும் சொல்லச் சொல்லத் தெவிட்டாது இன்பம் பெருக்கி இனிதுவக்கும். எனவே திருக் கதிர்காம மான்மியத்தைப் பற்றி ஆசிரியர் அ. சி. சிவம் அவர்கள் எழுதிய இவ்வெளியீடும் திருவருட் கூட்டுதலுக்கு உறுதியாயிருக்கும் என்று நம்புகிருேம்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு"

—என்பது வள்ளுவர் வாக்கு.

**சோ. சிவபாதசுந்தரம்**
தமிழ் ஒலிபரப்பு அதிகாரி

றேடியோ சிலோன்
26—9—50.



உ

முருகன் துணை

**அன்பும் அறிவும் அருளுந் திருவும்**
**இன்பும் எழிலும் இருதாமரை நேர்**
**தன் பொன்னடியும், தருவன் முருகன்**
**என் பொன்மனமே ஏத்தாய் தினமே**

என, தன்மனம் வாக்குக் காயம் மூன்றும் திருக்கதிரைவேற் பெருமானுக்கு அர்ப்பணஞ்செய்த நமது நண்பர் அருணைசலம் சின்னையா சிவம் ஆசிரியர் அவர்கள் நினைத்த சங்கற்பம் இனிது நிறைவேற— என் வழிபடு கடவுள் முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

வேலும் மயிலுந் துணை

**மாரியப்ப சுவாமி**
புதுக்குயவர்பாளையம்.

மதுரை
1-10-53.

1951ம் ஆண்டுக் கதிர்காம உற்சவப் போழ்தில், ஆங்கு இராமகிருஷ்ணமிஷன் தொண்டர் சபையின் சார்பாகப் பக்திப் பஜனை நிகழ்த்திய பின்னர் மோன யோகத்திருந்த சாது முருகதாஸ் அவர்கள் இக்கதிர்காம மான்மியம் என்ற நூலைப் பார்வையிட்டுத் திருவாய் மலர்ந்தளித்த

### பாராட்டுக் கவி:

**சாந்தநிறை சொல்பெருகச் சண்முகன்றனுடல் செய்து**
**காந்தமென இழுக்கின்றான் கசிந்துநிற்கும் அன்பர் தமை**
**வேந்தரொடு விண்ணவரும் வேதாந்தம் பலப்பலவும்**
**ஆய்ந்து நிற்குங் கதிர்காமத்தருங்காட்சி சொல்லிதே.**

*பித்துக்குளி*
18–7–51



உ

திருக்கதிரை நாயகன் துணை.

ஆன்மாக்களின் இருதய குகைக்கண் வீற்றிருந்தருள்பவர் குகேசப் பெருமானேயாவர். அவ்விருதய குகைதான் சிதாகாசப் பர வெளி எனப்படும் தகராலயம் என நான்மறைகளும் முழங்கும். புறநாட்டமுற்று வாழும் யாங்கள் என்றேனும் அகநாட்டமுற்றே மெய் வாழ்வுற்று வாழக்கடவராவோம். அந்த அகநாட்டமுற்றுக்காண விழைவார்க்குக் காணத்தரும் பரம்பொருளே கதிரைமலைத் தெய்வமாம் "குகேசன்" ஆவர்.

**"தேடிக் கண்டுகொண்டேன் திரு—மாலொடு நான்முகனுந்**
**தேடித்தேடொணுத் தேவனை என்னுள்ளே, தேடிக் கண்டுகொண்டேன்"**

என அப்பரடிகள் கூறியருளிய திருவாக்கினாலே எங்கள் உயிர்க்குயிராகிய குகப்பெருமான் இருக்குமிடம், புறக்கண்ணுக்குக் காண்பரியரென்பதும் "பிரமன் மால்காணுப் பெற்றியரென்பதும், அப்பெருமானுடைய அருள் ஞானத்தால் காணலுறு வார்க்குச் சிவஞானங் கண்ணுகச் சிவஞானப் பேராசிரியர் அறிவுறுக்கும் உபதேச மொழி வாயிலாகக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் முதலியவற்றால் தேகேந்திரியாதிகளில் வைத்துக்" கண்டவிவையல்லேனெனக்கழித்து அங்ஙனம் எஞ்சிநின்ற அறிவு வடிவாகிய சதசத்தாம் படிகத்தன்மையுற்று நிற்கும் பரிசுத்தமும் நின்மலமுமாகிய சுத்த சைதன்யமாவோனாகிய தூய ஆன்மாவாகிய படிகத்துக்கு மாணிக்க வொளியாய் விளங்கி ஏனைய நிறங்கள் பற்றுமேதன்வண்ணமாச் செய்தருளும் குறிப்பும் நெறியும், பிறவும் அப்பரடிகளால் உணர்த்தப்பட்டன. அத்துணை ஞானயோகக் காட்சிக்குரிய அருள்ஞானச் செம்மலைத் தம்மறிவினாலே காண்போமென்னுந் தற்போதமிழந்தோரே சென்று காண வல்லராவர். அஞ்ஞான்றும் அத்துணைத் தற்போதச்செயலிழப்பில் சென்றே தரிசித்து 'வருஞ்சாத நற்செயல் கதிர்காம யாத்திரையில் காணப்படுவதே. சிவக்ஷேத்ரங்களில் சிதம்பர ரகசியமும், துவாதசாந்தத்தலமாம், (திருவாலவாய்) மதுரையந்தலமும்போல எமது கந்த வேளுக்குரிய இரகசியத் தானமும் துவாதசாந்தத்தலமுமிக் கதிரையந்தலமேயாகும். இங்குள்ள கோயில் சிதாகாசப்பர வெளியை நினைப்பிக்கும். எவ்வுயிர்களதும் இருதய குகைக்கண் வீற்றிருக்கும் பெருமான் குகபரம் பொருளே என்பதனையும் அவரை அகத்தே காணுதல் ஒன்றே பிறப்பின் பயனுமெனப் போதியா நிற்கும் தெய்வத்தலமுமித்தலமேயாகும. ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட இச்சா ஞானக்கிரியா சக்திகளையுடையவுயிருக்கு விளக்கந்தரவமைந்த பல புலன்களை உயிர்தன்வண்ணமென மயங்கி நிற்ப, பக்குவமெய்திய ஆன்மாக்களுக்கு ஞான தேசிகன் தோன்றிப் பொய்க்

திறவைம் புல நிறங்கள் வேறாமெனவும் நீ முற்றறிவனுமல்லை; (சிவனு மல்லை) அறியாதபாசமுமல்லை படிகம்போல் சார்ந்ததன்வண்ணமாய்ச் சதசத்தானவை எவைஎனவிளக்கி இனிப், பலபுலன்களைச்சார்ந்து மயங் கா வண்ணம் குகப் பெருமான் அவ்வன்பர்கள் சாதன அறிவிலே மாணிக்க வொளியாய் விளங்கி முன்னைய புலனறிவு சாராமேகாத்து, இருதய குகைக்கண்ணே நீங்காதுறையும் குறிப்பே மாணிக்க கங்கை யும் அப்பெருமானது இரகசியத் தானமும் புலப்படுத்தாநிற்கும்.

இத்துணைத் தெய்வத்தல மான்மியமும் வழியும் பிறவும் நம் அன்பர் செல்வச் சிரஞ்சீவி ஆசிரியர் சிவம் அவர்களாலே கதிரைமலை யாத்திரை செய்வோருக்கு வேண்டப்படுங் குறிப்புக்கள் பலவும் கொண்ட தாக இலகுவான வசன நடையிலே தெள்ளத் தெளிய வரையப்பட் டுள்ளது. அவர்கள் விரும்பியவாறு அத் தெய்வத்தல மாட்சியும் அங்கேயுள்ள மாணிக்க கங்கை, அத்திருக்கோயிற்றரிசனவொழுங்கும் முருகப் பெருமானது அருள் நிலை; அந்நிலை பெறுமாறுள்ள ஞான யோகவியல்பும் பிறவும் இங்கே பெருமளவில் விரித்து உரைத்து, இந்நூல் நின்று நிலவுமாறும், இந்நூலாசிரியர் முயற்சி பயன்படுதல் குறித் தும் அக்கதிரை நாயகனை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

சைவ சித்தாந்த சரபம்

**(சென்னிமலை) ஈசான சிவாசாரியர்**

வேதசிவாகம பாடசாலைப் பேராசிரியர்.

பழநி.



உ

ஓம்

இறைவன்பால் பக்திபெருக, அவனது திருவிளையாடல்களையும், அவன் அமர்ந்த திவ்ய ஸ்தலங்களின் மகாத்மியங்களையும், செவியாரக் கேட்டலும், மனமுருகப் படித்தலும், மிகச் சிறந்த வழி. இவைகளால் நமது மனதில் தெய்வீகக் காதல் பெருகி அவருக்கு ஆட்படும்.

இந்தச் சிறந்த கருத்தைக்கொண்டே ஒவ்வொரு தலத்திற்கும் தலபுராணம் எழுதப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றிய, அன்பர் சின்னையா சிவம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கடம்ப மலரணிந்த கந்தன் இடங்கொள்ள மிக விரும்பியது கதிர்காமம். இத்தலத்தின் பெருமை எழுத்தாலும் வாக்காலும் அளவிட அரியது.

**இலங்கைத் தமிழ்க் கலாசாலைகளிற் கற்கும் சைவச்சிறார் களுக்கு சமய பாட புத்தகமாக உபயோகிப்பதற்கு இந்நூல் சால வும் சிறந்ததொன்றாகுமென்பது எமது அத்தியந்த அபிப்பிராயம்.**

இந்நூலை உதவிய அன்பர் சின்னையாசிவம் அவர்கள் சிவகுமரன் அருள் வெள்ளத்தில் திளைத்து நலம் பலவும் பெற்றுய்வாராக.

**ஸ்வாமி, ஸத்சிதானந்த யோகி**

சிவானந்த தபோவனம்
திரிகோணமலை.

விஜய-வரு தைத்திங்கள்
தைப்பொங்கல் திருநாள்
14—1—1954

# சமர்ப்பணம்.

**"எல்லாம் வெளிமயக்கே" என்று பழுத்த அநுபவங்கூறிப் போந்த பட்டினத்தடிகள், மயக்கின்றிக் கதிபெறுமாறும் கூறாது போந்தாரல்லர்! நல்லாரிணக்கமும், பூசை நேசமும், ஞானமும் என்பனவே, அடிகள் கூறிப்போந்த, கதிபெறுமாறாகியகூற்றாகும்!**

**குரு, லிங்கம், சங்கமம், என்னும் மூன்றனுள் "நல்லாரிணக் கம்" என்பது, அடியார் கூட்டமாகிய சங்கமத்தின் பாற்பட்ட தாகும். அவ்விணக்கங்காரணமாகவே, பூசைநேசம்,ஞானமாகிய இரண்டுமுதிக்கலாகும்.**

**யாழ்ப்பாணத்துக் கந்தர் மடத்திருந்த, சிவகுருநாத பீடத்து, மஹாதேவஸ்வாமிகளது, சிஷ்யத்துவ பாக்கியம் அடியேனுக் குக் கிடைத்தமைபற்றி அவர்களது சமாதிக்கே அதி அத்தி யந்த பக்தி பூர்வமான விநயத்தோடு இந்நூலை அர்ப்பணஞ் செய்து நிற்கின்றேன்.**

**அ. சி. சிவம்**

உ

ஓம் முருகா!

# நூன்முகம்.

குன்றுதோறாடும், குமரவேளாடும், கங்கையிலாடி, கந்தனைக்கண்டு, வந்தனைசெய்து வழிபட்டு நின்றேன். அவ்வளவுதான்! குஷ்டம் தீர்ந்து கஷ்டம் ஓய்ந்தது! எனவே "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதைக் குறிக்கோளாகக்கொண்டு அவனது மான்மியத்தைப் பகிர்முகப்படுத்துவான் பேராவல் கொண்டேன்.

மஹாமேருபோன்ற பல்லாயிரம் எழுத்தாளர் முன், மண்ணாங்கட்டிபோன்ற புல்லறிவினனாகிய யான் எம் மாத்திரமென்று பின்னிட்டு நின்றேன். ஆயினுமென்! திருச்செந்தூரின் கண் ஊமையாயிருந்த, குமரகுருபர ஸ்வாமிகளைக்கொண்டு கலிவெண்பா பாடுவித்தவனும், கந்தபுராணம் பாடுதற்கு, கச்சியப்பருக்கு "திகடசக்கரம்" என அடியெடுத்துக் கொடுத்தவனுமாகிய கந்தன் அடியேனுக்கும் அருள் ஈந்தான்!

என்செயலாவது யாதொன்றுமில்லை! அவன் செயலால் அவன் முன்னிற்க, அவனை நம்பி, அவன்தர, இந்நூலினை, எழுதி உலோகோபகாரமாக வெளியிடுவான் துணிந்தேன். துணிந்த போதிலும், அச்சுவாகன மேற்றும் விஷயமாக "வெறுங் கை முழமிடுமா", "மாவில்லாதவர் கூழ் குடிப்பதெங்ஙனம்" என்னும் முதுமொழிகள் நினைவிற்குவந்து முட்டுக்கட்டைகளாய் முன்மறித்து நின்றன.

வேண்டுவார் வேண்டுவதை ஈவானும், தன் பணிக்கெனத் தமியேனை ஆட்கொண்டவனுமாகிய கந்தன் நட்டாற்றில் விட்டானா! இல்லையே இல்லை!

கொழும்பு, கொட்டாஞ்சேனையைச்சேர்ந்த கிறீன் லேனில் வசிப்பவரும், விவேகானந்த வித்தியாலய மனேஜரும், ஸ்டான்காட் அச்சகக் காரியாதிகாரியுமாகிய V. பரநிருப சிங்கம் என்னும் வள்ளலை அதிட்டித்து நிற்கலாயினன். அன்னாரது அன்பு, அருள், ஊக்கம், பொருளுபகாரம் முன்னிடு, பொதுத்தொண்டு, திருப்பணி ஆர்வமாதியனவே



சாதனமாகக்கொண்டு எடுத்த கருமம் இனிது நிறைவேறலாயிற்று

இந்நூலினை, கண்கவர் வனப்புடன் இம்மெனும் அளவில் அச்சுப்பொறிக் கண்ணே திறம்பட ஏற்றி யிறக்கி முற்றுவித்த ஸ்டான்காட் அச்சகக் காரியாதிகாரி V. P. N. சிங்கம் அவர்கள் தங்களுக்கு உண்டான களைப்பினையும் சிறிதுங் கருதாது செய்யாமற் செய்த இப்பேருதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது, என்னும் நன்றிபாராட்டொன்றே யாம் செய்யத் தகுந்த தனிக்கைமாறாகும்.

இந்நூலினை யாம்எழுதத்தொடங்கிய காலந்தொடங்கி அச்சிட்டு முடியும் வரை பல்லாற்றானும் உதவிபுரிந்து பணமும் உதவிய புண்ணியசீலர்களையும் எம் நெஞ்சார நினைந்து அவர்களுக்கும் எமது பெரு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கதிர்காம மான்மியத்திற்குச் சிறந்த அணியாக அமைந்துள்ள அணிந்துரைகளை உள்ளன்புடன் வரைந்து உபகரித்த பெரியார்களாகிய, சுந்தரம் ஸ்வாமி, இராமகிருஷ்ண மிஷன்—ஸ்வாமி நடராஜானந்தா, சுவாமி சத்சிதானந்த யோகீஸ்வரர், சித்தாந்த சரபம், ஈசானிய சிவாச்சாரிய சுவாமிகள், கலாநிதி க. கணபதிப்பிள்ளை, அன்பர் சோ. சிவபாதசுந்தரம், மதுரை மாரியப்ப சுவாமி, சாது முருகதாஸ் ஆகியவர்களுக்கும் என்றும் குன்றா நன்றியறிதலுடையேம்.

இந்நூலினையும் இதுகனை அடுத்து வெளிவரவிருக்கும் கதிர்காம மான்மியம் 2ம் பாகத்தையும் தமிழ் உலகம் ஆதரித்து எமக்குப் பேர் ஊக்கம் அளித்திடுமென நம்புகின்றோம்.

"குற்றமே தெரிவார் குறுமா முனி, சொற்ற பாவினுமோர்குறை கூறுவர்"

எனவே, எவரேனும் இந்நூலின் கண்எவ்விதபிழையுந் தெரித்திகழாது அடியேனை மன்னித்து அடியேனது தொண்டினை மாத்திரமே பாராட்டி, ஆதரித்து உற்சாகமூட்டுமாறு பன்முறையும் பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

**அ. சி. சிவம்**

விஜய வருஷம், பங்குனித் திங்கள்
புனர்பூசம்
14—3—1954


# பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| கதிர்காம மான்மியம் ... ... | 1 |
| தீர்த்த மான்மியம் ... ... | 18 |
| சுவாமி தரிசனம் ... ... | 19 |
| கதிரை மலை ... ... | 21 |
| விபூதி மலை ... ... | 23 |
| செல்லக் கதிர்காமம் ... ... | 25 |
| கதிர்காமப் புராதனம் ... ... | 26 |
| முத்துலிங்க சுவாமிகள் ... ... | 29 |
| வள்ளி தெய்வானைப் பூர்வீகம் ... | 30 |
| சமரச வழிபாடு ... ... | 32 |
| யாத்திரைப் பலன் ... ... | 32 |
| உருத்திராக்கமான்மியம் ... ... | 35 |
| கதிர்காம யாத்திரை விளக்கம் ... | 38 |
| யான்பெற்ற இன்பம் ... ... | 53 |


உ

குகமயம்

# கதிர்காம மான்மியம்




ஆக்கியோன்:

**அ. சின்னையாசிவம்**

ஆசிரியர்

விவேகாநந்த வித்தியாலயம்

34, மேட்டுத் தெரு,

கொழும்பு-13.

உ

# கதிர்காம மான்மியம்

## காப்பு

**"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்**
**ஞானகுரு வாணிபதம் நாடு."**

சைவ சமயிகளாகிய எமது முழுமுதற் கடவுளும், அறுபத்துநான்கு திருவிளையாடல்களை உடையவருமாகிய சிவபிரானது இரண்டாவது திருக்குமாரர் முருகப்பிரானென அழைக்கவும் வழங்கவும் பெறுவர்.

முருக மூர்த்தியாகிய இவரையே, பக்த கோடிகளெல்லாம் கதிரைமலைக் கந்தனென்று பரவிநிற்கும், இவர் எஞ்ஞான்றும் குமர வடிவமே உடையவராதலின், குமரன், சேய், இளமுருகன், பால சுப்பிரமணியன் என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப் பெறுவர். இவரது ஜென்ம நட்சத்திரம் **விசாகம்** என்பர். சிவபிரானது நெற்றிக்கண்ணினின்று பாய்ந்து, திருப்பரங்குன்றத்துள்ள சரவண தடாகத்தில் வீழ்ந்த ஆறு பொறிகளும் ஆறுமுகங்களாக உருவெடுத்து அமைந்தமைபற்றி இவரை ஆறுமுகன், சரவணபவன் என்றும்; கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப் பெற்றமைபற்றி கார்த்திகேயன் எனவும் காரணங் கருதி அழைப்பர். கிரவுஞ்ச மலையைக் கிழித்தெறிந்ததாகிய இவரது வேலாயுதத்தின் பெருமை, மனோபாவனைக்குமே எட்டாத தொன்றாகும். அதுபற்றியே கதிர் வேல், சக்தி வேல், தங்க வேல், வடி வேல், சித்திர

வேல், குமார வேல், வெற்றி வேல் முதலாய பல்வேறு பரியாய நாமங்கள் இவரது வேலுக்கு வழங்கிவருகின்றன. ஐந்திணைகளுள் ஒன்றாய குறிஞ்சித்திணையில் குறிஞ்சி நிலமாகிய மலைக்கும் மலை சார்ந்த இடத்திற்கும் இவரே தெய்வமாவர். இதனாலேயே நிகண்டாசிரியர் இவரை; குறிஞ்சி வேந்தன் எனவும், சிலம்பன் எனவும் பாடியுள்ளார்.

போரிற் புறங்கொடுத்த சூரபத்மனை, சேவலும் மயிலுமாக்கி சேவலைத் தமக்குக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும், கொண்ட பெருமை நோக்கி ஆண்டலைக் கொடியுயர்த்தோன், மஞ்ஞை ஊர்தி என்னும் பெயர்கள் இவருக்கு வழங்கலாயின. (ஆண்டலை=கோழி; மஞ்ஞை=மயில்).

வளையல் விற்கப் புறப்பட்டதால் செட்டி என்னும் பெயரைப் பூண்டார். இவர் அணிந்துகொள்வது கடப்ப மலர் மாலையாதலால் கடம்பன் என்னும் பெயரும் இவருக்கு உரிமைத்தாகும்.

பிரணவாட்சரத்திற்கு பொருள் தெரியாது நின்ற பிர்ம தேவனைத் தலையிற் குட்டி சிறையிலிட்டவன்மையும், ஆதியிலே தமிழ் மொழிக்குக் குரவராக இருந்த சகல கலா பாண்டித்தியமும் வாய்ந்தவராகையால் ஆசான், புலவன் என்னும் உயரிய பட்டப் பெயர்களால் இனிது பாராட்டப்படுகின்றார். சுவர்க்கலோகாதிபதியாகும் இந்திரனது புதல்வியான தெய்வயானையை மணந்தமைபற்றி, தெய்வயானை காந்தன் எனவும், தினைப்புனங்காத்து, கிளி கடிந்த வள்ளிநாயகியாரை மணந்தமையால் வள்ளி மணாளன் எனவும் சூடாமணி நிகண்டு இவரை அழைக்கும்.

மதுரைக் கணக்காயனார் மகனாராகிய நக்கீர தேவர் அருளியுள்ள திருமுருகாற்றுப்படையில், நம் முருகப்பிரானாரது படைவீடுகள் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர்,



திருவாவினன்குடி என்னும் பழனி, சுவாமி மலை என்னும் திருவேரகம், பழமுதிர்சோலை என்னும் அழகர் கோவில் என்பன முருகப்பிரானது ஆறு படை வீடுகளென இருக்கவும் அவற்றையெல்லாம் விடுத்து நமது பிரானார் கதிர்காம க்ஷேத்திரத்தை நாடிச்சென்று அங்கு அதை உறைவிடமாகக் கொண்டுள்ளதானது வியப்பிற்கும் மயக்கத்திற்கும் இடனாகவே நிற்கின்றது.

இஃதிங்ஙனமிருக்க, முற்கூறிய படைவீடுகளுள் ஒன்றாகியதும் எமது நூலின் தலையங்கமாகியது மாகிய **“கதிர்காமம்”** என்பது பற்றி சிறிது ஆராய்வாம்:— பண்டைக்காலத்து மக்கள் இருதரப்பினராய், அதாவது, மந்தை மேய்ப்போரும், கமக்காரருமாகத் தமது வாழ்க்கையை நடத்தியுள்ளாரென்பது சரித்திர வாயிலாக அறிந்த உண்மை! ஆம்! கமக்காரர் அக்காலத்தே ஆற்றோரங்களை நாடி, தமது கமச்செய்கைக்கு வாய்ப்பாக, கமங்களிற் குடியேறி இருந்தது உண்மையிலுண்மையே! இந்நியாயம் பற்றியாக்கும்! பண்டாரகம, அழுத்கம, நொச்சிகம முதலாய பெயர்கள் எழுந்தனவென்ப. இச்சந்தர்ப்பத்தில், கதிர்காமம் என்னும் வார்த்தைபற்றி ஆராய்வது இன்றியமையாது வேண்டற்பாலதொன்றாகும்.

இவ்வார்த்தை சம்பந்தமாக, பல்வேறு அறிஞர்களும் பலவாறு அபிப்பிராயப்படுகின்றனர். எனினும் எமது ஆராய்ச்சிக்கு எட்டியவாறு ஒரு சிறிது கூறுவாம்.

கதிர்காமம் என்பது பொதுவான வழக்கே எனினும் அதனது தாற்பரியம் பல பேதப்பட்டு நிற்கின்றது. உதாரணமாக இப்பெயரை, சிங்களவர் “கத்தறகம” என்பார்; தமிழர் கதிர்காமம் என்பார்; ஆனால் அறிஞர்களோ என்றால் பலதிறப்பட்ட கருத்துக்களைக் கூறா நிற்பர். எது எப்படி எனினும், கதிர்காமக் கந்தனும், அவனது படை வீடும், அவனது நிகழ்ச்சிகளும் நமது நூலில் ஆராயப்படவேண்டியனவே! எனவே

கதிர்காமம் என்பது முற்றத்தீர்ந்த முடிவான பெயராகக் காணவில்லை! இதை, சிங்களவர் "கத்தறகம" எனவும்; தமிழர் கதிர்காமம் எனவும் வழங்குவது இயல்பும் வழக்குமாயிற்று. இவற்றுள், உண்மைத்தாற்பரியம் யாது என்பது இன்றும் கேள்விக்கிடனாகவே நிற்கின்றது. "கம" என்பதை "கமம்" என வழங்குவது தமிழ் மரபு எனவே "கதிர் கம" என்பதை கதிர்கமம் எனத் தமிழர் வழங்கலாயினர். சிங்களவர் இப் பெயரை, "கத்தறகம" என்பது யாம் சற்றே சிந்திக்கற்பாலதொன்றாகும்.

"கத்தறகம" என்பது "கத்துறுகம" எனவும் சிங்களத்தில் வழங்கற்பாலதாகும். "கத்துறு" என்பது, தோடங்காய் பருமனுள்ள காய்களையுடைய ஓர் நச்சு மரத்தின் பெயராகும். அவ்வாறான "கத்துறு" என்னும் பெயரையுடைய நச்சுமரங்கள் நிறைந்த இடமாதலின் அதை "கத்துறு" கம என்பார் ஒரு சாரார். அஃதங்ஙனமாக, கதிர்கள் நிறைந்த கமம்என்பதுபற்றி கதிர்கமம் என்பார் வேறொரு சாரார்.

"வேள்" என்பது மன்மதனைக் குறிக்கும். மன்மதன் காமன் எனப்படுவன். வள்ளியைப் பொறுத்த மட்டில், நமது முருகப் பிரானும் காமனேயாகும். அதிலும் சாமானிய காமனன்று எனவே, கடுங் காமன், கூரிய காமன், கதிர் காமன் என்பன அவனுக்குப் பொருத்தமேயாகுமென்க.

காமத்தினையுடையான், கதிர்காமத்தினையுடையான், கதிர்காமன், தனது இருப்பிடத்தை கதிர்காமம் எனக் கொண்டுள்ளது மரபும் சிறப்பும் எவரும் ஒத்துக் கொள்ளற்பாலதுமேயாமென்க.

எமது முருகப்பிரான் வள்ளியம்மை தெய்வயானையம்மை என்னும் இருவரையும் மணந்துள்ளான் என்பது புராண வரலாறாகும். எனினும் சூக்குமக் கண்



கொண்டு நோக்குவார்க்கு, வள்ளி தெய்வானை என்னும் பெயர்களிரண்டும் முருகப்பிரானது இச்சா சக்தி, கிரியா சக்தி என்பவற்றையே தெள்ளிதிற் புலப்படுத்தும்.

## பெயரின் தாற்பரியம்

"முருகு" என்னும் பதத்திற்கு, இளமை எனவும் ஒரு பொருள் கொள்வராகையால் இளமையையுடைய கலியுக வரதனாகிய சுப்பிரமணியன் முருகன் எனவும் பெயர் பெறுவன். நிற்க, கதிர்கமமோ, அன்றேல்; கத்துறு கமமோ எதுவெனினும் சரியே, அன்று தொட்டு இன்றுகாறும் வழங்கிவரும் மரபை ஒட்டி கதிர்காமம் என்வைத்துப் பேசுவோம்! இது நமது ஈழ நாட்டின் தென்கீழ்ப் பாகத்தில், தென் மாகாணத்தில், தென், கீழ் மாகாணங்கள் சந்திக்குமிடமாகிய கும்புக்கனாற்றின் மேல் பாகத்திலுள்ளதோர் ஸ்தலமாகும். ஆறும் கமமும் பொருந்திய இடத்தில் உள்ளதோர் கமமெனவே, கதிர்காம கங்கை அல்லது மாணிக்க கங்கையும் அதனையடுத்த கமமும் உளதாகையின் கதிர்காமம் என்னும் பெயர் படைத்துள்ளதென்க

"கத்துறுகம" எனினும் "கதிர்கம" எனினும் விஷயம்பற்றி பொருத்தமேயன்றி எதிரில்லையென்க. அங்குள்ள வயல்களில் நச்சுக்காய்களாகிய தோடங்காய்களை ஒத்த காய்களை உடைய மரங்களும், வள்ளியின் செந்தினைக் கதிர்கள் குவிந்த கமங்களும் இருந்தமை கண்கூடு.

கதிர்+கமம் என்பது (கதிர்கள் செந்தினைக் கதிர்கள்) அடுக்கி நிரப்பி வைத்த கமம் எனவே எக்கதிராயினும் சரி, கதிர்கள் நிரப்பிவைத்த கமம் என்பது பொருளாயிற்று.

குறிஞ்சி நிலத்தின் தெய்வமாகையால், முருகப்பிரானை, "குறிஞ்சி வேந்தன்" என அழைப்பர்,

இங்ஙனம் அழைப்பதற்குச் சான்றாக, பிள்ளையார் மலை, கதிரை மலை முதலிய மலைகள் அங்குண்டு. திருவிழாக் காலங்களில் முருகன் சுற்றுப் பிராகாரம் வருகின்றதாகிய கதிர்காம ஸ்தலத்தின் வீதியானது முக்கோண வடிவத்தில் அமைந்திருக்கும் சூக்குமமானது தூலார்த்திகளுக்கு அறிவிற்கு எட்டாததாகும். அது ஞானக் கண்களுக்கேயன்றி ஊனக் கண்களுக்கு ஒருபோதுமே புலனாகாது. இவரது வேலாயுதம் முக்கோண வடிவத்தை உடையது போலவே குறித்த வீதியும் முக்கோண சக்கரமாக அமைந்திருப்பது லிங்கத்தின் வடிவைக் காட்டுவதாகும். முக்கோண வடிவமுடைய வீதியும் வீதியோடு கூடிய திருக்கோயில்களும் கதிர்காம கங்கை யென்னும் பரியாய நாமத்தினையுடைய மாணிக்க கங்கையின் ஓரமாக அமைந்திருக்கக் காணலாம். கந்தப்பிரான் வள்ளி நாயகி, தெய்வ நாயகி என்பாரது திருச்சந்நிதானங்கள் முறையே தெற்கும் வடக்கும் கிழக்கும் நோக்கி இருக்கின்றன.

நீரோடைகளை வாஞ்சித்து, கதறி, தேடி, தவித்துச் செல்லும் மான் கூட்டங்களை யொப்ப, நாவரள, இடுப்பொடிய, உச்சி வேக, உள்ளங்கால் கொப்பளிக்க, வெயர்வை சிந்த, ஆர்வத்தோடும் அங்கலாய்ப்போடும் செல்லுகின்ற பக்த குழாங்களையெல்லாம் வரவேற்று உபசரித்து முருகப்பிரானது படை வீட்டுக்கு வழி காட்டுந் தன்மையும் மனப்பான்மையும் உடையார் போன்று வள்ளி மானுக்கு அடிமைபூண்ட முத்துலிங்க சுவாமிகள் கதிர்காமத்தில் மேல் திசையைநோக்கி வீற்றெழுந்தருளியிருக்கின்றார்.

சொக்கநாத சுவாமியும் மீனாட்சி அம்மையாரும் திருக்கோவில் கொண்டருளிய நான்மாடக் கூடலென்னும் மதுரையம்பதியிலுள்ள திருக்கோபுரங்களைப் போலுமாகாது; அன்றேல் திருவாரூர் முதலிய க்ஷேத்திரங்களைப் போலுமாகாது; கதிர்காம க்ஷேத்திரமா



னது சர்வ சாமானியமான சிறு மண்டபத்தையும் கர்ப்பக் கிருகத்தையும் மூலஸ்தானத்தையும் மாத்திரமே உடையதாக இருக்கின்றது.

## பூசை முறை

தமிழ் நாட்டின் ஏனைய திருக்கோவில்களில் நடைபெறுவது போன்று கதிர்காம க்ஷேத்திரத்தில் பூசை நைவேத்தியம் முதலியன பிராமணர்களால் நடத்தப் பெறுவதில்லை. இவ் வழக்கத்திற்கு முற்றும் முரணான முறையில் கப்புறாளைமாரே பூசகர்களாகி வேண்டிய கோவிற் பணிகளையெல்லாம் ஆற்றி நிற்பார்.

குறித்த கப்புறாளைப் பூசகர்கள் ஈரவஸ்திரங் கொண்டு தமது வாயை மூடிக் கட்டி, வேண்டிய அமிழ்தினை உட்பிராகாரங்களுக்கு காவடியில் எடுத்துச் சென்று வைத்த பின்னர் திரும்பி வெளியேறி ஆங்கு தொங்கவிடப்பட்டிருப்பதும் வள்ளி தெய்வயானை சகிதமாக உள்ள கலியுக வரதனது சித்திரப் பிரதிமைகள் தீட்டப்பெற்றிருப்பதுமாகிய மறைப்பீட்டுத் திரையின் முன்பதாக நின்று பிரணவ சொரூபம் என்று அழைக்கும்படியாக கரங்களைக் கூப்பி உபாசித்து நிற்பர்.

## ஆறுமுக இரகசியம்

மதுராபுரியிலிருந்து சற்றேறத் தாழ இரண்டு மைல்களுக்கப்பால் உள்ளதும் படை வீடுகளுள் ஒன்றாகிய திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்ததுமான சரவண தடாகத்தில் வீழ்ந்த சிவபிரானது நேத்திரப் பொறிகளாறும் ஆறுமுகங்களாக உருவெடுத்தன என்னும் தூலப் பொருளை மாத்திரமே அடியார்கள் அறிந்துள்ளனர் அன்றி சூக்குமத்தில் அதனது உண்மைத் தாற்பரியத்தை அறிந்துள்ளார் மிகச் சிலரே என்பது மிகையாகாது.

மயிலேறி விளையாடு முகமொன்று; சிவபிரானோடு கூடி ஞான உரையாடு முகமொன்று; மதங் கொண்ட அசுரராகிய சூரபத்மனாதியோரை வதஞ் செய்த முகம்

ஒன்று; வள்ளி நாயகியைத் திருமணம் செய்த முகம் ஒன்று; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவாரது பந்த பாசங்களை அறவே ஒழித்து வரப்பிரசாதம் வழங்கும் முகம் ஒன்று; கிரவுஞ்ச கிரி இரு கூறுகும்படி திருக்கை வேல் கொண்டு கிழித்தெறிந்த முகம் ஒன்று; என இங்ஙனமாக ஆறு மூர்த்தங்களுக்கும் ஆறு திரு முகங்கள் கொண்டுள்ள ஆறு முகத்தானை பாரத நாட்டிலும் ஈழத்திலுமுள்ள மற்றெந்தக் கந்த ஸ்தலங்களிலும் பார்க்கக் கதிர்காமத் தலத்தில் வழிபடும் முறையானது மிக மிக வியப்பிற்கும், களிப்பிற்கும், பரவசத்திற்கும், பக்திப் பெருக்கிற்கும் இடமான தொன்றே என்பது கண்கூடு.

கண்களைப் பொறித் தட்டி நிற்கும் மின்சாரத் தீபங்களோ அன்றேல் எண்ணெய்த் தீபங்களோ அன்றேல் தீவட்டிப் பந்தங்களோ எவையுமின்றி பல்லாயிர வருஷங்களாகக் கற்பூரத் தீபங்களால் மாத்திரம் பொலிந்து கோடி சூரியப் பிரகாசம் போன்று இடமகன்ற ஒளி கான்று விளங்கும் கதிர்காம மான்மியமானது எழுத்தாளர்களது எத்தகைய கட்டுரை வன்மைக்கும் எட்டாத இரகசியமாகும்.

## அரோஹரத் தாற்பரியம்

**அண்ட முகட்டை, அளாவிச் செவிடுபட ஒலிக்கும் "வேல், வேல்" என்னும் ஆர வாரத் தொனி ஒருபுறமும், கருத்தை அறியாது கேட்ட வாய் கேட்டு அரோ ஹரா — அரோ ஹரா என ஒலிக்குந் தொனி மறுபுறமுமாக ஓர் நவீன முறை பற்றியே கதிர்காம உற்சவம் நடைபெறுகின்றது.**

அகரம்+உகரம் என்னும் இரண்டும் ஒன்று சேர்ந்தே அரோஹரமானது என்பதும் இந்த அரோகரம் என்பது ஓம் என்னும் பிரணவ அட்சரத்தைக் குறிக்கும் என்பதும் எமது சோதர அடியார்கள் நன்கு கவனிக்கற்பாலதொன்றாகும். பண்டைக் காலத்து ஒரு போது மிருந்திராத மேள, தாள நாகசுர, சல்லரி வாத்தியங்களாதியன தற்போது கதிர்காமத்தில் இடம் பெற்றிருப்பது ஓர் நவீன முறையாகும்.



## தீச்சட்டி முறை

விளை கற்பூரச் சுமையும், விபூதித் திரளும் இடப்பெற்று, சுவாலித்தெரியும் தீச்சட்டிகளை பல்லாயிரம் பக்தர்கள் தத்தம் சிரங்களின் மேற் சுமந்து, அடிச்சட்டிகளினின்று பிறக்கும் அனலையோ, அகோரத்தையோ உணர்ந்தும் உணராதார் போன்று முக்கோண வீதியை வலம் வரும் காட்சியானது ஆஹா! எத்துணை மாட்சி.

குறித்த தீச்சட்டிகளினின்று மேலுக்குச் சுவாலையும் கீழுக்கு வெக்கையும் பிறக்கின்றன எனினும், சுகாதாரத்திற்கேற்ற குழை வகைகட்கெல்லாம் இராசா என்று போற்றப்படுகின்ற வேப்பங்குழை கொண்டு சமைக்கப்பட்ட சும்மாடுகளின் மேல் சுமக்கப்படும் தீச்சட்டிகளினின்று பிறக்கும் கற்பூர, விபூதி, வேப்பங் குழை என்பவை ஒன்று சேர்ந்து வீசும் வாசனையானது எவ்வித தொற்று வியாதிகட்கும் இடமில்லாத வகையில் யாத்திரிகர்கட்குப் புதுப் புது உற்சாகத்தையும், தைரியத்தையும், சுகபெலத்தையும், ஆனந்தத்தையும் ஊட்டி நிற்கக் காணலாம்.

## முருகஸ்தலங்கள்

எமது முருகப்பிரான் எழுந்தருளி இருக்கும் தலங்களுக்கு கணக்கே இல்லையென்ப! அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் என்னும் அருட்பாவாகிய தோத்திரப்பாவில் எண்பத்தைந்து (85) தலங்கள் கூறப்பட்டுள்ளன எனினும், நக்கீர தேவர் பாடியுள்ளதும் "பத்துப் பாட்டு" என்னும் சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றாயதுமான திருமுருகாற்றுப்படை என்னும் நூலில்,

அருணகிரி நாதர் கூறியுள்ள இடங்களில் மாத்திரமன்றி, சகல குன்றுகளிடத்திலும், காடுகளிலும், வனங்களிலும், ஆறுகளிலும், குளங்களிலும், முச்சந்தி, நாற்சந்திகளிலும் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

" குன்று தோறாடலும் நின்றதன் பண்பே அதாஅன்று
சிறுதினை மலரொடு விரைஇய மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊருர்கொண்ட சீர் கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன்தைஇய வெறியார்களனும்
காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங்குளனும் வேறு பல்வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்.

(திருமுருகாற்றுப்படை)

மருதம், நெய்தல் குறிஞ்சி, முல்லை, பாலை என வழங்கும் ஐவகை நிலங்களுள், குறிஞ்சி நிலமென்பது மலையும் மலை சார்ந்த இடமுமென்பர் ஆன்றோர். குறிஞ்சி நிலத் தெய்வம் முருகப்பிரானேயாவர். இக்காரணம் பற்றியே இவரது வாசஸ்தலமானது அதிகப்பற்றாய் மலைகளிலும் மலையடிவாரங்களிலும் மலை சார்ந்த இடங்களிலும் காணக்கிடக்கின்றது.

## முருகன் பெருமை

யுத்த தெய்வமும், கல்விக் குருவும் இவரே என்ப! பிரமதேவனைச் சிரசிற் குட்டிச் சிறையிட்டதும், தாரகாசுரனைக் கொன்றதும், சூரபத்மனாதியோரைக் கொன்று தேவர்களைச் சிறை மீட்டதும், இவரது யுத்த தெய்வத்துவத்திற்குச் சான்றாவதும், சிவபிரானுக்குப் பிரணவ மந்திரத்திரத்தின் அர்த்தத்தை உபதேசித்தமை இவரது வித்தியா குருத்துவத்திற்குச் சான்றாவதும் கண்டு தெளிக.



திருப்பரங்குன்றம், திருச்செந்தி அல்லது திருச்செந்தில் அல்லது திருச்செந்தூர், திருவாவினன்குடி என்னும் பழநி, சுவாமி மலை என்னும் திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் அழகர்கோவில் என்பன முருகப்பிரானது ஆறுபடை வீடுகளாயிருக்கவும் அவற்றுள் எல்லாம் விசேஷித்து எமது பிரானார் கதிர்காம க்ஷேத்திரத்தைநாடிச்சென்று ஆங்கு அதைத் தமது உறைவிடமாகக் கொண்டுள்ள செயலானது வியப்பிற்கும் மயக்கத்திற்கும் இடனாகவே நிற்கின்றது.

## முருகன் திருவிளையாடல்

புல்லு மேயாதமான், கொம்பு சாயாதமான், புள்ளி மேவாத மான் என்றெல்லாம் சினிமா உலகம் பாராட்டிப் பாடுகின்றவளும்; வள்ளிக்கிழங்குக் குழியில் பிறந்தவளும், குறநங்கையென்பாளுமாகிய வள்ளிநாயகி என்பாள், தன்னைகொண்டு கிளிகடிந்து ஓட்டிநின்ற செந்தினைப் புனமானது கதிர்காம க்ஷேத்திரத்தின் அருகாமையில் இருந்தமைபற்றி ஒருவேளை முற்கூறிய படைவீடுகளையும், ஏனைய தலங்களையும், ஒருதலையாகத் துறந்துவிட்டு ஆங்குச் சென்றனரோ என எவரும் யூகிக்க இடனாகின்றதன்றோ! அஃதங்ஙன மின்றேல் ஆண்டிப் பண்டார வேடங்கொண்டு, மெலிந்தார் போன்று, தினைப்புனந்தேடிச் செல்லவும், வள்ளியை வேண்டவும், கெஞ்சவும், தமையனாகிய ஆனைமுகனது ஆதரவுபெற்று அவளைப் புணரவும், வேங்கை மரமாகவும், செட்டி வடிவங் கொண்டு வளையல் விற்கவும் ஏதுக்கள் எவையும் காணேமே!

கிரேத, திரேத, துவாபர, கலியுகமென்னும் நான்கு யுகங்களிலும் இருந்திருப்பவராகிய முருகப்பிரான், கடைசியுகமாகிய இக் கலியுகத்தில் "கலியுக வரதன்" (வேண்டுவார் வேண்டுவன ஈவோன்,) என்னும் நாமதேயம் பூண்டு சம்பூரண மூர்த்திகரம்கொண்டு வீற்றிருந்து, பிறவிப் பெருங்கடல் நீந்துவார்க்கு, ஆணவம்

கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் மூலமாகவே ரோடழியுமாறு திருவருள் பாலித்து நிற்குந்தலம் கதிர்காமத்தலம் ஒன்றென்றே வெள்ளிடை மலைபோல், தெள்ளிதிற்புலப்படக் கிடக்கின்றது.

காயாத கானகத்தே நின்றுலாவிய வள்ளிமானைத் திருமணம் புரிந்ததுபற்றியாக்கும்! திருவிழாக் காலங்களில், யானையெருத்தம் பொலிய முக்கோண வீதி வழியே நமது கதிர்காமக் கந்தன் வலம் வரும்போதெல்லாம் வள்ளியின் மரபினரென்று பெருமையோடு அழைக்கப்படுகின்ற ஒரு தொகையினரான பெண்கள் ஆலாத்திப் பெண்கள் என்னும் பட்டப் பெயர் தாங்கி ஆலாத்தி யெடுத்தும், சாமரை வீசியும் உல்லாசமாகச் சென்றுகொண்டிருப்பர்.

**"பாவிகள் கண்ணுக்குச் செப்பேடு-உற்றுப்<br>பார்த்தால் பத்தரைமாற்றுத் தங்கம்"**

என்பதை ஒப்ப யானையின் முதுகின்மேல் இருத்திச் சர்வ ஜாக்கிரதையோடும் கப்புறளைமார் தாங்கிப் பிடித்துச்செல்லும் யந்திரப் பெட்டியினது இரகசியந் தான் இருந்தவாறு என்னே !

## உற்சவ காலம்

சிற்றறிவும், சிறு தொழிலும், சின்னைட் பலபிணியுமுடைய நம்மனோர்க்குப் புலனாகாத குறித்த யந்திரப் பெட்டியானது, முத்துலிங்க ஸ்வாமிகளால் சமைக்கப் பெற்ற யந்திரத்தை உள்ளுறையாகக் கொண்டுள்ளது என்பது ஐதீகம். ஏனைய தலங்களிற்போலாகாது கதிர்காமத்தில் வருடமொன்றுக்கு நான்கு தட்வைகளில் திருவிழா நடைபெறுகின்றது. முதலாவது திருவிழா சித்திரைப் புத்தாண்டுத் தினத்தன்றும், இரண்டாவது விழா ஆனித் திங்களிலும், மூன்றாவது விழா ஆடித் திங்களிலும், நான்காவதுவிழா கார்த்திகைத் திங்களில் திருக்கார்த்திகை தீபத்தினத்தன்றும் நடைபெறும்.



## யாத்திரை முறை

உலக்கை தேய்ந்து உளிப்பிடியானாற்போல, ஆஸ்திகம் குன்றி, நாஸ்திகமும்; மெய்ஞ் ஞானம் குன்றி அஞ்ஞானமும், விஞ்ஞானமும் தலைதூக்கித் தாண்டவமாடி நிற்கும் இந்நாளில், முன்னைப்போல முருகப் பிரானது கதிர்காம ஸ்தலமானது பெரும்பாலான யாத்திரீகர்கட்கு அருண்மாரியை வாரி அள்ளி வழங்குவதற்கு அன்னரது நடைமுறை பரிதபிக்கத்தக்க வகையில் சீர் கேடும் முட்டுக்கட்டையுமாகவே இருந்து கொண்டிருக்கிறது. கந்தக்கடவுளது அநுமதியும் திருவருளும் பெற்று, தவங்கிடந்து, கானல், பனி, மழை, கூதல், குளிர் என்பவற்றில் அடியுண்டு கால்கள்கடுக்க நடந்து, கொடிய வனவிலங்குகட்கு ஆளாகியும், ஆளாகாமல், மட்டக்களப்பு மார்க்கமாகச் சென்று, மாணிக்க கங்கையில் திருமுழுக்காடி, கரையேறி, கந்தனைக் கண்டு கை கூப்பி நின்றும், சாஷ்டாங்கமாய் விழுந்தும், கலந்து உறவாடியும், கருணை வெள்ளத்தில் தோய்ந்தும், மெய்யடியார்கள் மெய்யன்போடு மெய் சிலிர்க்க நின்ற காலங்கள் கரை யேறிப்போக, இன்றைக்கோ அந்தவழக்கமானதுமிகக்குறைந்து, கதிர்காமயாத்திரை என்பது காத்திரமற்று, தோத்திரமற்று, ஆத்திரமற்று வெறுமனே களியாட்டும், கண் காட்சியும், வேட்டை வேட்கையும், இடாம்பீகமும் ஆகி மோட்டார் வண்டி, ஆதிய வாகனங்களில் இவர்ந்து நோய் நொடி இன்றி உல்லாசமாய், தோழ சகிதமாய்ச் சென்று திரும்பும் சேட்டை யாத்திரையாக அடி தலை மாறி நிற்கின்றது. ஐயகோ! இத்தகைய நிலைமையில் யாரைக் குறை கூறுவது! முருகனது திருவருளையா! அன்றேல் யாத்திரீகர்களது பெரும் மருளையா!

பொருளையும் மருளையும் ஒரு தலையாய்த் துறந்தாலன்றோ அருளும், தெருளும் வாய்க்கப்பெறும்! வேண்டுமாயின் சாஸ்திர சம்பந்தமான புண்ணிய தீர்த்த யாத்

திரையைச் செய்து காட்டிப்போந்த உத்தமியாரான காரைக்கால் அம்மையாரை ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகக்கொண்டு கொள்ளத்தகுமன்றோ!

## அன்ன சத்திரங்கள்

கால் நடையாய் நடந்து யாத்திரை செய்வோர்க் கேயன்றி, உல்லாசகமனிகளாய் யாத்திரைசெய்வார்க்கு கந்தனது கருணை கிடைப்பது முயற் கொம்பே என்ப தற்கு எட்டுணையேனும் ஐயமே இலதாகும். களைப்பும், சோர்வும் தீர்த்துவைப்பதற்கு, கங்கா தீர்த்தமும்; உடற்றும் பசியைத் தணிப்பதற்கு, புண்ணிய புருஷர் களால் யாக்கப்பெற்றிருக்கும் தரும கைங்கரியங்களா கிய அன்ன சத்திரங்களும் வேண்டியமட்டும் வேண்டி யாங்கு தாராளமாக அமைந்திருக்கும்போது குறைவு பாடுதான் என்னே! சொர்ணதானம், கோதானம் பூதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம் முதலாய பல்வேறு தானங்களுள் அன்னதானமே தலை சிறந் தது என்பதனுண்மையை, புத்தி பூர்வமாக உணர்ந்த பிரபுக்களால் மார்க்கண்டு முதலாளி மடம், தம்புச்சாமி மடம், செட்டிகள் மடம், அப்புசாமி மடம், டக்டர் கனகசபை மடம், சடையம்மா மடம், மாணிக்கத் தியாக ராச மடம், மௌனசாமி மடம், பொன்னம்பலசாமி மடம், மலையம்மா மடம் என்பவற்றோடுகூட ராம கிருஷ்ண மடமும் இன்று ஒன்று சேர்ந்து யாத்திரீ கர்கட்கு குளிர்ந்த கற்பகதருப்போலும், தருவின் நிழல் போலும், அடைக்கலமும் ஆதரவுமாக, கதிர் காமத்தலத்தில் நிறுவப்பெற்றிருப்பது அவர்களது பூர்வ புண்ணியப் பலனேயென்க

குறித்த அன்னதானப் பிரபுக்களால் அமைக்கப் பெற்றிருக்கும் முன்னர்ச் சுட்டிய சத்திரங்கள் ஒருபுற மிருக்க, கல்லில் நார் உரித்தாற் போன்றும் மணல் கொண்டு கயிறுதிரித்தாற் போன்றும்: நரிவால் கொண்டு கடலினது ஆழத்தை அளந்தாற்போன்றும்



கடின உழைப்போடு கூடிய தட்டு முட்டுக்களும் பண்ட பதார்த்தங்களுங் கொண்டு, சாது சங்கரப்பிள்ளை முருகேசரால் உச்சி மலை உச்சியிலும், கோடாலிச் சாமியாரால் உச்சிமலை மத்தியிலும், தீக்குளி சாமியென சாதாரணமாய் அழைக்கப் பெறும் செல்லையாச்சாமியாராலும், மேலும் இவை போன்று பிள்ளையார் மலை, செல்லக் கதிர்காமப் பாதை: திசை மஹாரூமைக்கும், கதிர்காமத்துக்கும் இடையே அப்பாக்குட்டி முதலாளி என்பவரால் ஐந் தாவது மைலில் நிறுவப் பெற்றிருக்கும் தண்ணீர்ப் பந்தல்களது இன்றியமையாத சிறப்பும் தொண்டும் அருமையும் எடுத்துக்கூறும் தரத்தன அன்று.

குறித்த மகான்களது புகழுடலங்கட்கு பல்லாண்டு கூறுதும்! யாதானுமொன்றைச் சொல்வது எளிது செய்வது அரிது என்பர் மூதுணர்ந்தோர்—குறித்த தண்ணீர்ப் பந்தல்களின் சார்பாக இன்றைய உலகின் தராதலம் படைத்த சைவப் பெரியார்களும் சொல்வ தோடு மாத்திரம் நின்றுவிடாது செய்தும் செய்வித்தும் திருப்பணியாற்றி சிவபதமடையச் சிரமத்தோடுஉழைப் பார்களென்பது எமது நம்பிக்கை,

## மாணிக்ககங்கா மான்மியம்

பத்து அவதாரங்களுள் ஒன்றான புத்த அவதாரங் கொண்ட விஷ்ணு பிரானை, தனது தாய்மாமனைக் கொண்டுள்ளதனாலாக்கும், கதிர்காமக் கந்தனது திருக் கோயிலின் மருங்கில் அரச விருட்சங்களும்; சுவர்க் காதிபதியாகிய இந்திரனது புதல்வியாம் தெய்வயானை யை மணந்ததனாலாக்கும், மாணிக்க கங்கைக் கரையில் அரும் பெரும் மருத மரங்களும், சூரியனது வெப்பத் தை மறைத்து, யாத்திரிகர்கட்கு நிழல் கொடுக்கும் ஆகாய விதானங்கள் போன்று விரிந்துபரந்து நின்று நிலவுகின்றன,

சாமானிய தினங்களில் பொதுவாக, புறங்கால், கணுக்கால் அளவுக்கு மாத்திரம் மறையக்கூடிய நீர் நிலையினை உடையதாக இருக்கும் மாணிக்கக் கங்கை யானது, கந்த வேள் திருமஞ்சனமாடுந் தினமாகிய நீர் வெட்டுத் தினத்திலன்று திடீரெனப் பெருகி, பொங்கி, ததும்பி, வழிந்து ஓடுகின்ற உன்னதக் காட்சியானது உண்மையில் அதியற்புதமான ஓர் காட்சியேயாம்! இக் காட்சியைக் கூர்ந்து நோக்கி ஆராயுமிடத்து, வைகை நதியானது பெருக்கெடுத்து கரை புரண்டு ஓடியதும், செம்மனச் செல்வி என்னும் ஏழை வணிக்ப் பெண்ணினது பங்கை அடைப்பதற்கு பிட்டு வேண்டி, சிவபெருமான் மண் சுமக்கப் புறப்பட்டது மாய சந்தர்ப்பங்கள் நமக்குப் புலனாகின்றன.

## பாம்புப் புதுமை

பல வர்ணங்களைக்கொண்ட பல்வேறு பாம்பினங்கள் மாணிக்கப்பிள்ளையாரது திருக் கோயிலுக்கருகாமையிலுள்ள விருட்சங்களிலேறுவதும் இறங்குவதும்; காலா காலங்களில் முருகப்பிரானது மான்மியத்தை உபந்நியாசமாக எடுத்து ஓதும் பக்த சிகாமணிகளது உடல் மேலும் தோள் மேலும் நகர்ந்து விளையாடுவதும் ஆங்குள்ள சலவைக் கற்றூண்களின் மேலும் கீழும் சுயேச்சையாக நடமாடித் திரிவதுமாகிய எல்லாம் கதிர்காமக் காட்சிகளுள் அற்புதமான காட்சிகளாகும். இக் காட்சிகளைக் கண்ணுறுவாரெல்லாம், பதுமன், குளிகன், கார்க்கோடகன், அனந்தன், ஆதி சேடன் முதலிய அட்டமா நாகங்களும் அங்கேயே நிரந்தரக் குடிபதிகளாகி, தழைத்து வேரோடி மூங்கில் போன்று சுற்றம் மூகியாது பலுகிப் பெருகிக் கொண்டிருக்கின்றன எனவே முடிவுகட்டி நிற்பர்.

கதிர்காமத்தின் ஒரு புறத்தே சூரன் மலையும், இன்னோர் புறத்தே விபூதி மலையும், கதிரை மலையும் காணக் கிடக்கின்றன.



## விபூதி மான்மியம்

விபூதி என்னும் மொழியானது, வி+பூதி என்னும் இரு மொழிகளைக் கொண்ட ஓர் தொடர் மொழியாம். இதில் "வி" என்னும் ஒரு வடமொழி உப சர்க்கமும், "பூதி" என்னும் ஓர் தனி மொழியும் அமைந்திருக்கக் காணலாம். "வி"என்பது, "இன்மை" அல்லது "அன்மை" என்னும் எதிர்மறைப்பொருளைக்குறிக்கும்; "பூதி" என்பது, 'நரகம்' எனப் பொருள் தரும். எனவே, 'விபூதி' என்னும் தொடர் மொழியானது, நரகமின்மை, நரகஞ் செல்லாமை அல்லது வீட்டுக்கு வழியாயது, எனப் பொருள் தரும்.

இத்தகைய சிறப்பினையுடையதும் விபூதிப் பிண்ட வடிவம் உடையதுமான கதிரை மலையானது, நமது கதிர்காம க்ஷேத்திரத்திற்கு மாத்திரமே தனிச் சிறப்பும் உரிமையும் பெருமையும் சொந்தமுமாக உள்ளதுமாகும்.

எத்தனையோ சிவஸ்தலங்களில், கோமயம் என்னும் சாணத்தில் இருந்தே விபூதியைத் தயாரித்து எடுத்து அணிகின்றனர். சிற்சில விஷ்ணுஸ்தலங்களில் நாமக்குளங்களிலிருந்து விபூதி போன்ற ஓர் வகைக் களியை எடுத்து அணிகின்றனர். ஆனால் கதிர்காமம் ஒன்றே இயற்கையாக அமைந்த விபூதி மலையைத் தன்பாற்கொண்டுள்ள பெரும் பேற்றினையுடையதாயிருக்கின்றது. ஒப்ப நோக்குமிடத்து, விபூதி மலையிலிருந்து பெறப்படும் இக் கதிர்காம விபூதியானது மற்றெதையும்விட நிறத்திலும், குணத்திலும், மணத்திலும் முற்றாக வேறுபாடும் விசேஷமும் உடையதொன்றென்பது உள்ளங்கை நெல்லிக்கனி!

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால
வாயான் றிரு நீறே"

என்னும் ஸ்லோகத்தினது உண்மைக்கு இவ் விபூதியானது ஓர் சிறந்த சான்றாகும்.

---

# தீர்த்த மான்மியம்

---

விளக்கு, இடம், தீர்த்தம், வெண்ணீறு, உருத்திராக்கம், புத்திரன், பார்ப்பான், புராணம், கீர்த்தனை, அருச்சனை அட்சரம், முதலாய பல்வேறு அறங்களுள் தீர்த்தமும் ஒன்றென்பது இங்கு பெறப்படுகின்றது.

"காசியிலிறக்க முத்தி கமலையிற் பிறக்க முத்தி
தேசமர் தில்லை தன்னில் திரு நடங்காண முத்தி"

என்றெல்லாம், முத்திநெறி கூறி நமது ஆன்றோர் போந்தன ரெனினும் தீர்த்த யாத்திரை மான்மியமானது கங்கா தீர்த்தம், கதிர்காம தீர்த்தம் என்னும் இரண்டினையுமே முக்கியமாகக் குறிக்கும். அவற்றுள்ளும் கதிர்காமத் தீர்த்தமானது மகா பெரிய மான்மியமுடைத்தாகும்.

"அத்தனிறைவன் அமலேசன்
அமராலயத்தினரு குறுநீர்
சுத்த மசுத்த மாயினு நற்
சுரர்கள் பரவுங் கங்கை யென்றே
புத்தி புரிந்தங்கத் தடத்தில்
புனலுட்படிவோர் யாரேனினும்
சத்த சனனத்துறு பாவந்
தணந்து சிறந்து தயங்குவரே"



என்பதனல் கந்தபிரான் எழுந்தருளியிருக்கும் கதிர்காம ஆலயத்தின் தோணித்துறை போன்ற மாணிக்க கங்கையின் மகிமையும், அதில் ஆடுகின்ற தீர்த்த மான்மியமும் அதனுலாகும் பெரும்பேறும் நமக்குப் புலனுகின்றன.

ஆலயத்தின் அருகாமையிலுள்ள நீரானது குப்பை, கஞ்சல், வண்டல்கள் அடைந்தோ, அன்றேல், மல சல மாதிய வற்றால் அழுக்கடைந்தோ அசுத்தமாயினும் அதைப் பொருட்படுத்தாது தேவ கங்கை யெனக் கருதி பெரியோர், சிறியோர், வாலிபர், கன்னியர், யௌவனர் அந்தகக் கேடர் என்ற பேதமேயில்லாது, அங்க வஸ்திரம் அணிந்தோ, அணியாமலோ மாணிக்க கங்கையில் நீராடும் அந்த வேளையானது மன்மத பாணங்களுக்கோ, அப்பாணங்கள் பாய்ந்து தைப்பதற்கோ, தைப்பதனல் ஏற்படும் வேதனைகளுக்கோ எதற்கும் கடுகளவேனும் இடங்கொடுக்காத மஹா தூய்மையும், பக்தியும், பயமும், பரவசமும் நிறைந்த தொன்றாகும். இங்ஙனமாவதும் கந்தபிரானது கருணைப் பெருக்கின்பாற்பட்டதென்றே கூறலாகும்.

திசைமஹாராமையிலிருந்து பாதசாரிகளாய், வேகக் கொதிக்க பன்னிரண்டுமைல் தூரம் தாண்டிச் செல்லும் யாத்திரிகர்கள், கருட புராணத்திற் கூறப்படும், அகோரமான அக்கினி ஆற்றைத் தாண்டிச் செல்வார்போன்று மாணிக்க கங்கையிற்கால் வைக்கும் அந்த க்ஷணமே தங்களது சகலவித இடர்களும் பரிதியைக் கண்ட பனிபோல் மறையப் பெறுகின்றனர். அதன் மேல், கங்கையில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கரையேறிக் கோயிலை அணுகுவர்.

---

# சுவாமி தரிசனம்

---

கதிர்காமஸ்தலத்திலே சுவாமி தரிசனம் பல திறப்படும். அங்கு அரசன் முதல் ஆண்டி ஈறாகவும், ஞானி முதல் அஞ்ஞானி ஈறாக

வும், இராணி முதல் பிச்சைக்காரி ஈறாகவும், முதலாளி முதல் தொழிலாளி ஈறாகவும் யாவர்க்குமே ஏகோபித்த முறையில் வழிபாட்டுக்கு இடமுண்டு. வேல் குத்தி காவடி சுமந்து தொழுது நிற்பார் ஒரு சாரார்; செடில் குத்தி முள் மிதியடியில் நடந்து காவடியோடு வழிபடுவார் இன்னொரு சாரார்; அன்னக் காவடி; பாற்காவடி; பறவைக் காவடி எடுத்து நிற்பார் வேறொரு சாரார். நீறு பூத்த மேனியோடு அங்கப் பிரதட்சணை செய்து முக்கோண வீதியை வலம் வருவார் ஆயிரக்கணக்கானோர், உருத்திராக்கம், முட்டை முத்திரை என்பவற்றோடு யோக நிஷ்டையில் வீற்றிருப்பார் நூற்றுக்கணக்கானோர்; பக்திக் கனல் பற்றி யெரிய பரவசங் கொண்டு மெய் மறந்து அருட்பெரு வெளியில் ஆனந்தக் கூத்தாடி பாலரும் பேயரும் பித்தருமென நிற்பர் பல்லாயிரவர். கந்தரநுபூதியையும்; கந்தரலங்காரத்தையும், கந்தர் ஷஷ்டி கவசத்தையும், இடிமுழக்கொப்ப அட்டதிக்கும் செவிடுபடுமாறு பாராயணஞ்செய்து நிற்பர் ப்ல்வேறு குழுவினர். தெய்வயானை அம்மன் சந்நிதிப் பக்கத்திலுள்ள பழநி ஆண்டவர் கோயில் சந்நிதியிலிருந்து புறப்பாடாகி தினந்தோறும், இரவு பகல் (24) மணித்தியாலங்களும் சல்லரி தாள வாத்தியங்களோடு இடையீடின்றி முக்கோணவீதியையும்சுற்றி முருகசுலோகம்சொல்லி முருகபஜனைசெய்து நிற்கும்தொண்டர்கள் இருபாலாருமாய் எண்ணிறந்தவராவர். இங்ஙனம் பலதிறப்பட்டு நிற்கும் ஸ்வாமி தரிசனத்தோடு, பாலர், விருத்தர், முதியோர், பழம்



பிணியாளராதியோரது, தீ விளையாட்டுத் தரிசனமும் ஓர் முக்கிய அம்சமாகும், முருகப்பிரானது திருச்சந்நிதியில் அருச்சனை, பூசை, நைவேத்தியம், நேத்திக்கடன் என்பவற்றின்பேரால் வழங்கப்படும், பணம், பொருள், வேலாயுதம், செப்பேடுகள் என்பவற்றுக்கு அளவேயில்லை. பசியால் வாடி, உடல் மெலிந்து, கால் தள்ளாடி, கண் பஞ்சடைந்து செவி அடைத்து, செந்தினைமாவுக்குக் குறவர் சேரியில் கெஞ்சி நின்ற முருகனுக்கு இவ்வளவுதிரண்டசொத்துக்கள் ஆண்டுதோறும் சென்று மலைபோல் குவிந்திருக்கவும் என்னே! இன்னமும் ஆண்டி வடிவம்! என்னே இன்னமும் காட்டு வாசம்! என்னே இன்னமும் ஏழைக் குடிசை! அம்மம்ம! அரியும் அயனும் காணாத அரன் மகன் ஆண்டியப்பன் உண்மையில் கலியுக வரதனேயன்றோ! இவனது பெருமையை எவர்தாமறிவர்! எவர்தாமறியமாட்டுவர்.

# கதிரை மலை

முருக தரிசனம்செய்து முடித்த பின்னர், அவனது அநுமதியும் அருளும் பெறுவோர் கதிரை மலைக்குச் செல்வர். கதிரைமலை என்பது கதிர்காமத்திலிருந்து ஏறத்தாழ கூப்பிடு தூரத்துக்கப்பால் சுமார் இரண்டு அல்லது மூன்றுமைல் உயரமுடையது. எனினும் அருள் பெற்றோர்க்கு, குருவிக்கு இராமேஸ்வரம் இருப்பது போல, மிகமிகச் சொற்ப தூரத்தில் இருப்பதுபோன்றே தோன்றும் உடல் வலியை நம்பி, சுயபெலன்

கொண்டு கதிரை மலைக்குப் போகலாமென்னல் ஒருபோதும் சாத்தியமேயாகாது.

குறித்த மலையின் உச்சியைச் சேர்வதற்கு படிகள் செதுக்கப்பெற்றிருக்கின்றன. எனினும் பாதையோ கரடு முரடும் கடினமுமான ஒற்றடிப்பாதை என்றே சொல்லல் வேண்டும். மலையிலும், மருங்குகளிலும், காடும், கரம்பையும், விலங்கினங்களும் காணக்கிடக்கின்றன. தனது வயிற்றிற் பிறந்த வள்ளி நாயகியையும், அவளது சுற்ற மித்திரர்களையும் விட்டுப் பிரிந்து அப்பாற் செல்ல மனம் சகிக்காததனாற்போலும் மான் கூட்டங்களும்; சகோதரபாச மேலிட்டால் தம்பியாகிய கந்தனையும் விட்டுப்பிரிய மனம் பொருந்தாது மென்மேலும் ஆபத்துக்குதவவேண்டும் என்பதனாற்போலும், ஆனைமுகவனது முகங்களைக்கொண்ட யானைக்குழாங்களும் அங்கு காணப்படுகின்றன. மலையின் உச்சியானது சமமும் மேடு பள்ளமுமுடைத்தாய், சுமார் ஆயிரம் பேர்களை அடக்கக்கூடிய அளவு பரந்திருக்கின்றது. மச்சுப் பாவிய மாட மாளிகைகளோ, கூட கோபுரங்களோ, அங்கு காணக்கிடையா. ஓர் வேலாயுதம் மாத்திரம் நிறுவப்பெற்றிருக்கின்றது. கதிரை மலையின் கருவூலம் இவ் வேலாயுதமென்றே சொலற்பாலதாகும்.

மக்களது இருதயத்தின் தோற்றத்திற்கு உவமையாகும் எனக்கூறப்படும் தேங்காயை உடைத்து, இருதயம் உடைந்து கசிந்து கண்ணீர் மல்குவதுபோல, தேங்காயின் உள்ளே இருக்கும் நீராலபிஷேகம் செய்வதும் தூப வர்க்கங்களுள் ஒன்றாகிய கர்ப்பூரம் எரிப்பதுமே அங்கு பிரதான வழக்கம்.

முன்னர்க் குறித்தவாறு இரண்டு அல்லது மூன்று மைல் உயரமுடையதெனக் கூறப்படும் கதிரை மலைக்கு திடகாத்திர தேகமுடைய புருடர்களே சென்று வருதல் மிக மிகக் கஷ்ட சாத்தியமாயிருக்கும், அதற்கவு



எதிர் மாறாக; தொண்ணூறும் பத்தும் சென்ற துவண்ட கிழவர்களும் கோல்கொண்டு தள்ளாடும் குடுகுடு கிழவிகளும், பச்சைக் குழந்தைகளும் கட கடவென்று ஏறி பம்பரம்போலச் சுழன்று வருகின்றார்கள் என்பதைக் காணுந்தோறும் எவரது நெஞ்சந்தான் பகீரிடாது!

---

# விபூதி மலை

விபூதி, உருத்திராக்கம் என்னுமிரண்டும் சிவ சின்னங்களாகும் என்பது சிவ சமயச் செல்வர்கள் யாவருமறிந்த உண்மை! விபூதியைப் பொறுத்தமட்டில் வேறெந்த மதத்தினர்க்குமில்லாத ஓர் தனிச்சிறப்பு. சிவசமயிகட்கே உரித்தாகின்றது என்பது எவரும் ஒத்துக்கொள்வர். மும்மூர்த்திகள், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், சுவர்க்காதிபதியாகிய இந்திரன், அவனோடு கூடிய திக்குப் பாலகர்கள், வசிட்டர், ஆதி முனிவர்கள் யாவருள்ளும் விபூதிப் போட்டியில் முதல்வரெனப் பிரசித்தி பெற்றவர் முழு முதற் கடவுளாகிய சிவபிரானே என்பதற்குச் சான்று, பாதாதி கேச பரியந்தம் இவர் நீறு பூத்த மேனியனாக நிற்பதுவே, இவரது திருமேனியை இடையீடின்றிப் பூக்கவைத்த நீறானது, கதிர்காமத் தலத்திலிருந்து சமீபத்தில் உள்ள விபூதி மலையில் உள்ளதென்றே யூகிக்கக்கிடக்கின்றது. அங்ஙனமாயின் சிவபிரானுக்குச் சொந்தமாயிருந்த விபூதி மலையானது அன்னார் சுடலைப்பொடி பூசத் துணிந்து சென்ற காலத்தே முருகப்பிரானுக்கு நன்கொடையாய் அல்லது பிதிரார்ச்சிதமாய் வந்து அடைந்திருத்தல் வேண்டும் என்கின்றனர். முருகனுக்குக் கிடைத்த

விபூதி மலையானது நல்லதிஷ்டவசமாக, பக்த கோடி களது பாவனைக்கு ஏற்றதாகிவிட்டது. இவ்விபூதி மலையிலிருந்து எடுத்து, பல்வேறு திக்குகளுக்கும் கொண்டு செல்லப்படும் விபூதிச் சுமைக்கு அளவுமில்லை, நிறையுமில்லை. ஓர்போதும் குறைவுபடாத செல்வமாக விபூதி மலையானது விளைந்தும் வளர்ந்தும் பெருகிக்கொண்டே இருக்கின்றது.

நிற்க ஆகாமிய வினையில்மூந்தி, மன மொழி மெய் யென்னும் திரிகரணங்களும் ஒருங்கே பாழாகி நிற்கும் பாவரோகிகளாகிய மக்கட்கெல்லாம் எழுவகைப் பிறவிகளிலும்மீட்டிய பாவத்தைத் தொலைக்க வல்லது கதிர் காமத் தீர்த்தமே என்று தீர்த்த மான்மியம் கூறியிருப்பதோடமையாது, கதிர்காம விபூதி மான்யமிழும், ஈண்டுக் கூறுவான் துணிந்தேன், கதிர்காமக் கந்தவைத்திய சிகாமணி தயாரித்த சஞ்சீவி எனவும், பஸ்பம் எனவும், விபூதி மலையின் விபூதியை வாயிலிட்டு உட்கொண்டு காச நோய், க்ஷயரோகம், சூலை நோய் முதலிய தீராத கன்ம வியாதிகள் நீங்கப்பெற்றோரும், பெறுவோரும் எண்ணுக்கணக்கிலடங்காதவராவர். அஃதே போன்று அதே விபூதியை சொறி சிரங்கு முதலிய தோல் வியாதிகட்கும், குட்டம் போன்ற அழுகு தொழுநோய்கட்கும் பூசிக் குணமடைந்தோரும் இன்றுமே அங்ஙனம் குணமடைவோரும் *கூற்றிலடங்கார்.



* கூற்றிலடங்கார்—பழனிட்டத்தும் அடங்கமாட்டார்கள்.



# செல்லக் கதிர்காமம்

இது கதிர்காமத்தலத்திலிருந்து ஏறத்தாழ மூன்று மைல்களுக்கப்பால், யானை ஆதியாம் கொடிய வன விலங்குகள் நெருங்கியுள்ள காட்டகத்தே இருக்கின்றது. இங்கே ஆள் காட்டிப் பிள்ளையார் கோவில் என ஒன்று உண்டு. விண் மீன்களைப் பழித்து, பள பளவென்று ஒளிவீசி, யாத்திரிகள் குழாத்தைக்கண்டு களித்துத் துள்ளிக்குதிக்கும் பலவின மச்ச சாதிகள் நிறையப்பெற்ற ஆற்றினோரமாக அமைந்திருக்கும் செல்லக் கதிர்காமத்தின் காட்சியானது கண்கொள்ளாததாகும். வெண் கம்பளம் விரித்தாற்போன்ற பஞ்சினும் மிருதுவான குருகு மணலின்மேல், சூரியனது உச்சிநேரச் சேட்டையைக் கடிந்து விதானம்போன்று நெருங்கி நிற்கும் மரங்களின் சோலையின்கீழ் யாத்திரீகர்கள் தத்தம் உடல்களும் உள்ளங்களும் பூரிக்க அமர்ந்திருப்பர். கதிர்காமத்தலத்திற்போலாது இங்கே பொங்கலும் படையலுமாற்றிக்கொண்டும் கொடுத்தும் குதூகலித்து நிற்பர்.

செல்லக் கதிர்காமக் கந்தனைச்சாட்டி அவன் பெயரால் பிட்சா பாத்திரங்களோடு பாதையினிருமருங்கிலும் உட்கார்ந்தும் தவழ்ந்தும் படுத்தும், நடந்தும் அறத்திடு பிச்சைகூவி இரப்போர் அநேகமாயிரமாவர். ஒரு வேளை அக்காலத்தே தாருகா வனத்துச் சென்று அங்கையிலோடேந்தி ஐயமேற்ற சங்கரனாரது காரிய வீரனாகிய புதல்வனென்றாக்கும் அவனது திருக்குமாரனாகிய செல்லக் கதிர்காமத்தான் இருக்குமிடம் நோக்கி இத்தனைபேரெல்லாம் முன்சொன்னவாறு ஐயமேற்றுக் கொண்டிருக்கின்றனர்!

கதிரை மலைக்கோ, விபூதி மலைக்கோ, செல்லக் கதிர்காமத்துக்கோ எதற்கெனினும் சரியே! தமது

உடல் வலி, புய வலி என்பவற்றை நம்பிச்சென்ற, செல்கின்ற எத்தனையோ யாத்திரிகர்கள் வழி தப்பியதும், திசைகெட்டுத் திரிந்ததும், காணாமற்போய், காடேறிக் கிரையானதும், இரையாகின்றதும் அநுபவ வாயிலாக அறிந்த உண்மைகளாகும். இது ஒருபுறமிருக்க, கந்தனை நம்பி, காடுசெடி எங்குந்தேடி, சென்ற மார்க்கத்தில், மனசார வழி தப்பி அலைந்தோர் மாசங்கள் சென்றும் யாதொரு விக்கினமுமின்றி கந்தனது கடைக் கணிப்பிலும் காவலிலும் தஞ்சத்திலும் தாரகத்திலுமிருந்து சுகபெலத்தோடு மீண்டுவந்த அத்தியந்த அற்புத சம்பவங்கள் நேற்று முண்டு, இன்று முண்டு! என்று மங்களமாக, கதிரைவேல் கருணை பாலிப்பதாக.

# கதிர்காமப் புராதனம்

இது விஷயமாக, சரித்திர ஆராய்ச்சியானது ஒன்றற் கொன்று பல்வேறு துறைகளில் முரண்படுகின்றமைபற்றித் தற்காலிகமாக அதை ஒதுக்கிவிட்டு, யுக்தி அநுபவங்கட்கு ஒட்டிய சிற்சிலவற்றை மாத்திரம் ஈண்டுச் சற்று ஆராய்வாம். **ஈழம்** என்பது சுத்த தமிழ் நாடே! புலத்திய மஹாரிஷியினது குமாரன் வச்சிரவாகு; வச்சிரவாகுவின் மகன் குபேரன். காலக்கிரமத்தின்படி நமது ஈழ நாடானது அகத்தியரிலங்கை, புலத்தியரிலங்கை, குபேரனிலங்கை, இராவணனிலங்கை, விபீஷணனிலங்கையென அழைக்கப்பட்டும் ஆட்சி செய்யப்பட்டும் வந்துள்ளது. தமிழ் நாட்டைச் சூழ்ந்த பதினேழு நாடுகளுள், **சிங்களம்**, எனவும் ஒரு நாடு கூறப்பட்டுள்ளதே எனினும், அது மிக மிகப் பிந்திய காலத்தே கூறிய தொன்றாகும்,



அதுவும் சிங்களம் என்னும் பாஷைபற்றியாவது, சாதி பற்றியாவது கூறப்பட்டதொன்றன்று. கறுவாப்பட்டை நாடு எனக் கூறுதற்குப் பதிலாக அதன் பரியாயப் பெயராகிய சிங்களநாடு எனக்குறித்ததே சிக்கலுக்கும் சந்தேக விபரீத மயக்கத்திற்கும் இடனாயிற்று. தமிழகத்தின் விரிந்தபரப்பின் ஒருபகுதியாகிய ஈழமானது தமிழருக்கே அன்றி ஒருபோதும் ஒருவகையிலும் கி. மு. 543க்கு முன்னர் வேறெவர்க்குமே சொந்தமுடைத்தாயிருந்ததன்று. அங்ஙனமாக வலிந்துநின்று உடையவனிலும் கைபற்றினவன் மிடுக்கன் என்றாலொப்ப தமக்குச் சொந்தமென்போருக்கு நமது ஈழ நாடானது இரவலில் இரவலேயன்றி சொந்தமுமன்று நித்தமுமன்று! கதிர்காம க்ஷேத்திரமானது அமைந்திருக்கும் நிலப்பரப்பெங்கணும தமிழர்களது ஆதிக்கத்தின் கீழேயே அன்று தொட்டுப் பல்லாயிர வருடங்களாய்த் திகழ்ந்து வந்தது, தமிழரல்லாதார்க்கு, கதிர்காமத் தொடர்பு ஏற்பட்டது மிக மிகப் பிற்பட்ட காலத்திலேயே என்பது துணிவு. இன்று முஸ்லீம் மக்களும் கதிர்காமத்தலத்தில் தங்கட்கு உரிமை கூறி நிற்கின்றனரெனினும், அவ்வகை உரிமையும் கி—பி, 10ம் நூற்றாண்டுக்கு—அதாவது முஸ்லீம் மக்கள் பரத கண்டத்திலிருந்து உந்தப்பட்டும் பத்தாம் நூற்றாண்டில் இலங்கைத் தீவின் உள்ளே கால்வைத்த பின்னர் மாத்திரமே ஏற்பட்டுள்ளதென்பது சரித்திர சம்மதமாகும்.

கதிர்காமத்தின் அயற்புறங்களில் தமிழ, சிங்கள சாதியங்கள் பிற்காலத்தே கலந்து வாழ்ந்தமைபற்றி, சிங்களப் பெயர்கள் இட்டு வழங்கலாயிற்று, இக்கொள்கையின் உண்மைக்கு அங்குள்ள கதிரை மலை, விபூதி மலை, ஆள்காட்டிப் பிள்ளையார் கோயில், செல்லக் கதிர்காமம், ஞானமலை தினைப் புனம் முதலிய தனித் தமிழ்ப் பெயர்களே தக்கசான்றுகளாகும்.

தேவநம்பிய தீசன் காலத்திலேயே கி. மு. 307 புத்த மதமானது இலங்கைக்கு வந்ததென்பதும்; விஜ

யன் காலம் முதல் தேவநம்பிய தீசன் காலம் வரைக்கும் சைவ சமயமே இலங்கையில் வழங்கிவந்ததென்பதும் சர்வமத, சர்வசன சம்மதமாகும். எனவே, தமிழ சிங்கள சாகியங்களிரண்டும் ஓரே கோயிலில் ஒருமித்து வந்தனை வழிபாடுசெய்து வந்தமை யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமாகும்.

பிற்பட்ட காலங்களில் ஆட்சியும் ஆதிக்கமும் தலைப்பட்டதின் காரணமாக இந்து மதக் கோவில்களினுள்ளே பௌத்த விக்கிரகங்கள் நுழைந்தும் இடம் பெற்றும் இருக்க நேர்ந்ததில் ஐயப்பாடில்லை. பதி, பசு, பாசம், என்னும் திரிபதார்த்தங்களுள், பதி என்னும் ஆன்மாவைப் பற்றியும், மோட்ச நரகங்களைப் பற்றியும் எவ்வித கொள்கையோ, ஞானமோ, உபதேசமோ, அற்றவர்களாகிய பௌத்த சமயிகட்கு பதிஞானம்; பசு ஞானம், பதிக் கொள்கை, பசுக் கொள்கை, பதி உபதேசம் என்பவற்றோடு எவ்வித தொடர்பும் இல்லாதிருக்கவும் அவர்கட்கெல்லாம் இந்துக் கோவில்களின் மூலஸ்தானத்து விக்கிரகங்களோடு தொடர்பும் உறவும் பங்கு பாகமும் சொந்தையும் உரிமையும் ஏற்பட்டது சைவ சமயிகளது துரதிஷ்டவசமேயாகும்,

இலங்கையும் தமிழருடையது; கதிர்காமத்தலமும் தமிழருடையது; கதிர்காமத்துப் பூசகர்களாகிய கப்புறளைமாரும் ஆலாத்திப் பெண்களும் இராவணேசனது சந்ததியாராக இருந்து சிதைந்து போன தனித் தமிழர்களது பரம்பரையினரே யாவர்.



# முத்துலிங்க சுவாமிகள்

இதன் முன்னர் ஓரிடத்துச் சுட்டியுள்ள முத்துலிங்கஸ்வாமிகளைக்குறித்து ஈண்டுச் சிறிது ஆராய்வாம்: இவரது திருநாமமானது ஓர் காரணப் பெயரேயாகும். அஃதெங்ஙனமெனில் இவர் சமாதிப்பேறெய்திய போழ்தில் இவரது திரு உடலமானது லிங்கவடிவமாகி முத்துப் போன்று பொலிந்து ஒளிவீசிற்றென்பர். கதிர்காமத்திலுள்ள வள்ளிநாயகி, தெய்வ நாயகி யென்பாரது திருக்கோவில்களைச் சமைப்பித்தவர் இவரே. முருகப்பிரானது' இயந்திரத்தை மூலஸ்தானத்தின் கண்ணே அமைப்பித்தவரும் இவரே. இவற்றோடுகூட, தெய்வ நாயகி சந்நிதியில் காணக்கிடக்கும் கலியாண மண்டபம் என்பதும் ஆண்டுள்ள ஓமக் கிடங்கும் இவராலேயே அமைக்கப்பெற்று இவரது திருநாமத்தினாலேயே வழங்கி வருகின்றன. ஸ்வாமிகள் தங்கி இருந்த இடமும் இக் கலியாண மண்டபமே என்பர், இவர் சமாதியெய்தியதும் கதிர்காமக்ஷேத்திரத்திலேயே! இவரது பெயரால் முத்துலிங்கஸ்வாமி கோயில் என அழைக்கப்படும் கோவிலொன்று கதிர்காமத்திலுண்டு.

வள்ளி நாயகி எழுந்தருளி இருக்கும் திருக்கோவிலின் பக்கத்தில் ஓர் பள்ளிவாசலும் முஸ்லீம் பெரியார் ஒருவரது சமாதியும் காணக்கிடக்கின்றன. அப்பெரியாரானவர், முத்துலிங்க ஸ்வாமிகளது சகாக்களுள் ஒருவரும் சிஷ்யருள் ஒருவருமென்பது ஐதீகம்,எவரெனினும் சரியே எங்குள்ளார், எக்காலத்தவரெனினும் சரியே, எக்குலத்தார் எம்மதத்தினரெனினும் சரியே, தொண்டர்தம் பெருமை சொல்லவும்படுமோ!

# வள்ளி தெய்வானைப் பூர்விகம்

இதற்கு முன், குறமகள் வள்ளியையும், இந்திரன் மகள் தெய்வானையையும் முருகப்பிரான் திருமணஞ்செய்தாரெனக் கூறியுள்ளோம். இவ்விருவரையும் பற்றிய பூர்வோத்தரங்களை வாசக நேயர்கள் தெரிந்துகொள்வது சாலச்சிறப்பாகுமெனக் கருதி அவற்றை இட்டுச் சில கூறுவாம்:-

சண்முகக் கடவுளானவர், காமனும் நாணத்தக்க சௌந்தரியமும், வாலிபமும் கோடி சூரியர் ஒன்று கூடியதுபோல அதிகப்பிரகாசமும் வாய்ந்து. மகா அற்புதத் திருவிளையாடல்களைச் செய்துவந்த காலையில், இவரது அழகும் வன்மையும் கீர்த்திப் பிரதாபமும் சகல அண்டங்களும் புகழுந்தன்மைத்தாக இருந்தமையால், இதைக் கண்ட கபட நாடக சூத்திரதரனாகிய விஷ்ணு என்பவர், உலக மாதாவாகிய இலக்குமி அம்மையாரின் இடது பாகத்தமைந்த அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்னும் இரு நங்கையர்களும் முருகப்பிரானையே மணஞ்செய்ய வேண்டுமென்று நினைத்து கைலையங்கிரிச் சாரலில், சரவணப் பொய்கையில் தவம்செய்து கொண்டிருந்தார். இங்ஙனம் விஷ்ணு பிரானானவர் இயற்றிய பெருந் தவத்தின் பயனாய், அமிர்தவல்லி என்பாள் தெய்வயானை என்னும் பெயரோடு இந்திரன் மகளாகவும், சுந்தரவல்லி என்பாள் வள்ளியம்மை என்னும் பெயரோடு மான்மகளாகவும் அவதரிக்கலாயினர். இவர்களுள், தெய்வயானையாரது கலியாணம் திருப்பரங்குன்றத்திலும் வள்ளியம்மையாரது கலியாணம் தினைப்புனத்திலும் நடந்தேறியவென்ப. வள்ளிமலைச்சாரலில் தோன்றியமையாலும், வள்ளிக்கிழங்கு தோண்டப்பெற்ற குழியின் கண்ணே கிடந்தமையாலும் வள்ளிமானுக்குவள்ளி நாயகி என்னும் பெயர் காரணமாமிற்று என்பர்.



முருகப்பிரானைப் பொறுத்தமட்டில் அவரது இருதாரச் சம்பவமானது ஓர் பெரும் சூக்குமமாகவே அமைந்துள்ளதாகும், வள்ளி நாயகி என்பது, முருகப்பிரானது, கிரியா சக்தியையும் தெய்வ நாயகி என்பது அவரது ஞான சக்தியையும் உலகினுக்கு விளக்கிக் காட்டும் கருவிகள் அல்லது சாதனங்களாம், இவ்விரு நாயகிமாரையும் கிரியா சக்தி ஞான சக்தி என்பது மாத்திரமன்றி, சிற்சக்தி பராசக்தி எனவும் வழங்கி நிற்பர். இவற்றின் சூக்குமத்தை அறியும் ஆற்றலில்லாத நிர்மூடரெல்லாம் தூலப்பொருளை மாத்திரமே தூக்கிப் பிடித்துக்கொண்டு கண்ட கண்ட பாட்டில், கொண்ட கொண்ட கோலமாய் பலவற்றையும் பிதற்றி நிற்பர். அன்னார்க்குப் பரிகாரம் அன்னாரே அன்றி வேறெவரேனும் ஆற்றவேமுடியாது.

“ என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரியவறுப்பினும்
அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி
என் பொன்மணியினை எய்தவொண்ணாதே.

இக்கவியானது திருமூல நாயனார் பாடிய மூவாயிரம் விருத்தங்களையுடைய திருமந்திரம் என்னும் பத்தாம் திருமுறையிலுள்ளது. இதிற்கண்டுள்ளபடி, அன்போடுருகி அகங்குழைந்து நிற்கும் பக்தர்களுக்கு உருவத் திருமேனியோடு தோற்றி சாதி, மத, நிற, பேதங்களெவையுமின்றி அருண்மாரிபெய்து ஆட்கொள்ளும் கலியுக வரதன் நமது கந்தப்பிரானேயன்றி எந்தப் பிரானுமன்று! இதுபற்றியே

“ விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றனன் மாமணிச் சோதியான்
உறவு கோலிட்டுணர்வுக் கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன்னிற்குமே ”

எனக்கூறிப் போந்தனர் பரமபக்தர்கள்.

## சமரச வழிபாடு

பிராமண வருணத்தவராகிய சம்பந்தர்; வேளாள வருணத்தவராகிய அப்பர்; பறைக்குடியிற் பிறந்த நந்தனார் என்னுந் திருநாளைப்போவார், வலையனாகிய கண்ணப்பன்; குயவனாகிய திருநீலகண்ட நாயனார் முதலியோர்க்கெல்லாம் சாதிபேதம் பாராட்டாது தனது திருச்சந்நிதானத்தில் புகலிடமீந்து அரவணைத்து ஆதரித்த பெருந்தன்மையும் பெருங்குணமும் நமது கந்தப்பிரானது தந்தைப்பிரானாகிய சிவபிரானிடத்துக்குடிகொண்டிருந்தமையாலாக்கும் தந்தையின்குணம் மைந்தருக்குமுண்டு என்றாலொப்ப, கதிர்காமச் சந்நிதியில், பெருவியாதியாகிய சாதிபேதமென்னும் வியாதிக்கு இடமென்பதேயில்லை என்னும்படியாக, சிறுபான்மைத் தமிழரென நம்மவரால் அடக்கி ஒடுக்கி ஒதுக்கப்படும் ஹரிசனர் எவருமே இடம் பெற்று, தமதிஷ்டப்பிரகாரம் வந்தனை வழிபாடு அர்ச்சனை ஆற்றிச் செல்கின்றனர். ஏனைய எத்தனையோ ஸ்தலங்களில் கிடைக்கப்பெறாத கிடைத்திராத இச்சலுகையும் பாக்கியமும் கதிர்காம க்ஷேத்திரத்தில் கிடைக்கப்பெறுவது கந்தனது கருணைப் பிரவாகமும் ஹரிசனரது நல்லதிஷ்டமுமே யென்க.

## யாத்திரைப் பலன்

முருகப்பிரானது முற்கூறிய இக் கருணைப்பிரவாகம், பாரதநாட்டுக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியருக்கு, திருச்சிற்றம்பலவன் கைச் சீட்டு எழுதிக்கொடுத்த அதே இடத்திலிருந்து உற்பத்தியாகி, பெருகி, ஓடி, கடல் கடந்து, தட்சண கயிலாயத்தை நோக்கிவந்து, கதிர்காம க்ஷேத்திரத்தில் படிந்து



கட்டுப்பட்டு நின்றதும் நிற்கின்றதுமாகிய தொன்றாகும். குறித்தகைச்சீட்டு, பின்வருமாறு காண்க

**"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டு படிமிசையில்**
**பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து**
**முத்தி கொடுக்கை முறை"**

எனவே தந்தையாகிய சிவபிரான் மூலம் பெற்றான் சாம்பான் என்னும் பறைச்சாதியினனுக்கு அருள் கிடைத்ததை ஒப்ப, மைந்தனாகிய கந்தன் மூலம் ஹரிசனர்க்குக் கதிர்காமத்தில் சுயாதீனமான இடமும், வசதியும் அருளும், அநுக்கிரகமும் கிடைத்துக்கொண்டிருப்பது; கண்டும் கேட்டும் புளகித்து ஆனந்தங் கொள்க!

கதிர்காம க்ஷேத்திரத்தில் சர்வஜன, ஜர்வ மத சமரசத்திற்கு இடமும் உரிமையும் இருப்பதுபோன்றே, பூதவுடலோடு சம்பந்தப்பட்ட சர்வாங்க வியாதிகளுக்கு, விசேஷமாக, தீராத கன்ம வியாதிகளாகிய குஷ்டம், கசம், காசம் என்பவற்றுக்கு பூரண ஆரோக்கியம்தர வல்ல அருமருந்துகளாகிய பெருமருந்துகளென்னும் குருமருந்துகள் திருமருந்துகளாய் ஆங்கு காணவும், கண்டுகளிக்கவும், பெறவும், பெற்று அநுபவித்துச் சுகிக்கவும் கூடியனவாயிருக்கின்றன. இம்மருந்துகள் பெரும்பாலும் மூவகைப்படும், அவையாவன:—

**முதலாவது:** கதிர்காமக் கந்தையனது அரவிந்த திருப்பாதங்கள்

**"தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லான்**
**மனக்கவலை மாற்ற லரிது"**

மாய வாழ்வெனுஞ் சோகத்தால் உணங்கி உள்ளங்குழைந்து, பிணங்கி, கோச பாசப் பின்னலில் சிக்குண்டு நின்று, கவலும் ஆன்மகோடிகளுக்கெல்லாம்

அவர்களது கவலையை மாற்ற வல்ல மருந்து, முன் சொன்னவாறு கந்தப்பிரானது உபயதிரு வடிகளே யாம். "பாத தரிசனம், பாவ விமோசனம்"

இரண்டாவது மருந்து சந்திரனைப் பழித்த தட்பமும், பளிங்கினைப்பழித்த்துலக்கமும்,முத்தினைப்பழித்த காந்தியும் கங்கையைப் பழித்த பெருமையோடுகூட, சப்த சாகரங்களைத் தாமும் பழித்து நிற்கும் பெருமையுடைத்தாகிய மாணிக்க கங்கையும் தூய தீர்த்தமுமாகும்.

இத் தீர்த்தமானது, மக்கட்கு மருந்தாகிப் பரிகரிக்கும் நீர்மை, பிறிதோரிடத்துக் கூறியவாறு,

"அத்தடத்தில் புனலுட்படி வோர்யா ரேனினும்
சத்த சனனத்துறு பாவந் தணந்து சிறந்து தயங்குவரே"

என்பதனல் நன்கறியக்கிடக்கின்றது.

பொதுவாக நோக்குமிடத்து, கீரிமுகம் மாறி நல்ல முகமான, நகுல முனிவரது சம்பவமும்; குதிரை முகம் மாறி மானிட முகமான மாருதப்புரவீகவல்லி என்பாளது சம்பவமும் இவைபோன்ற பிறவும் கந்தக் கடவுளது திருக்கோவில்களைச் சார்ந்த தீர்த்தங்களின் மான்மியத்துக்குத் தலைசிறந்த சான்றுகளாய் நிற்கின்றன,

மூன்ருவது மருந்து—கதிர்காம க்ஷேத்திரத்தைச் சார்ந்த விபூதி மலையிலிருந்து பெறப்படுவதாகிய திருநீருகும்.

நெருப்பான மேனியனும் நீறு பூத்த மேனியனும் சுடலைப்பொடிபூசியவனுமாகிய சிவபிரான்விபூதியேஉருவாக உடையவன்; திரிபுண்டரத்தைக்காட்டிலும், விபூதியை உத்தூளனமாக அணிவதிலேயே அத்தியந்த நாட்டமும் ஆர்வமும் உடையவன்; இச் சிவபிரானது திருக்குமாரராகிய ஆறுமுகவேலனின் சொந்தமாக உள்ள கதிர்காமத்து விபூதி அதியற்புதகரமான நென்



பதற்கு, ஐயமோ ஆட்சேபமோ எதுவுமில்லை, இது அருமருந்தனைய ஓர் அமிர்த சஞ்சீவியாகும்.

இதனைப் பொடியாக உட்கொண்டாலும் சரியே! உத்தூளனமாக அங்கமெங்கும் அழுந்தப் பூசினலும் சரியே! அன்றேல், திரிபுண்டரமாக மந்திர விதிப்படி அணிந்தாலும் சரியே! இதன் மூலம் மேனிக் குஷ்டம், தீராப்பிரமேகம், சொறி, சொறி கரப்பன், செங்கரப்பன், செவ்வாப்பு, கருவாப்பு, கிரந்தி, சூலை, சந்து வாதம், பெரு வியாதி, முதலாய யாவும் காட்டுத் தீயிலகப்பட்ட சருகினைப்போல எரிந்து, தீய்ந்து, மாய்ந்து போகுமென்பது ஆண்டாண்டு தோறும் பல கோடிப் பக்தர்களும் நாயினும் கடைபோன நாயேனுகிய அடியேனும் பட்டப் பகல் போல, வெட்ட வெளியில் திட்டவட்டமாய் கண்டறிந்த உண்மையாகும்.

கதிர்காம யாத்திரிகர்கள் கொண்டுவரும் விபூதியை அதிக அங்கலாய்ப்போடு உபயகரங்களும் நீட்டி, ஏற்று நோயாளர்களுக்குப் பூசியும், வாயிலிட்டும் திலகமிட்டும் விஷக்கடி வாய்களிற் போட்டும் ஆரோக்கியமடைந்தோர் ஆயிரக்கணக்கினராவர்.

---

# உருத்திராக்க மான்மியம்

அடியார்கள் அணிந்திருக்கக் கண்டனவும் காண்பனவும் கதிர்காம க்ஷேத்திரத்தில் காணக்கிடப்பனவும் கிடைப்பனவுமாகிய உருத்திராக்க மணிகளைக் குறித்துச் சிற்சில ஈண்டு ஆராய்வாம்:—

**உருத்திராக்கம்** என்பது, உருத்திர + அக்கம் என்னும் இரு தனி மொழிகளைக் கொண்ட ஓர் தொடர்

மொழியாகும். **உருத்திர** என்பது, **சிவபிரானது** எனவும், **அக்கம்** என்பது, **கண்** எனவும் பொருள் தந்து நிற்கும்; எனவே, **உருத்திராக்கம்** என்பது சிவபிரானது கண்கள் என்ப!

பூர்வகாலத்திலே, தாரகன் என்னும் அசுரன், கந்த வேளாற்கொல்லப்பட்ட பின்பு அவனது புத்திரர்களாகிய தாரகாட்சன், வித்துவான், மாலி என்னும் மூன்று அசுரர்களும் வரத்தின் பலத்தினால், முறையே பொன்மதில், வெள்ளிமதில், இருப்பு மதில் எனப் பெரிய மூன்று நகரங்களைப்பெற்று, சிவபக்தியுடையவராய், சிவபூசை ஆதியனசெய்தும், தேவர்கள் யாவரும் தமது தந்தையைக்கொல் வித்தாராகையால் பழிக்குப் பழி வாங்க நினைத்தும் வருத்துவாராயினர். அத்துன்பங்களைச் சகிக்காத விஷ்ணு பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் சென்று சிவபிரானது திருச்சந்நிதானத்தையடைந்து முறையிட்டுப் புலம்பி நின்றனர். அத்தகைய நிலையினைக்கண்ட பரசிவன், தேவர்களை நீக்காது காப்பாற்றுதலும், தம்மைப் பூசிக்கும் அசுரரை ஒடுக்காது ஆதரித்தலும் முறையாதலின் மௌனங்கொண்டவராய்த் தமது மூன்று திருக்கண்களையும் மலர்த்திக்கொண்டிருப்ப அவைகளினின்றும் நீர் பொழியலாயிற்று. சூரிய வடிவமாகிய வலக் கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு உருத்திராக்க மரங்களும்; அக்கினி வடிவமாகிய நெற்றிக் கண் பொழிந்த நீரிலே பத்து உருத்திராக்க மரங்களும் உற்பத்தியாயின. சந்திர வடிவமான இடக்கண் பொழிந்த நீரினின்று வெண்ணிற உருத்திராக்கம் தோன்றிற்று இவற்றையெல்லாம் சக்தி, விஷ்ணு, பிரமன், திக்குப்பாலகர், ஆதி சேடன் யாவரும் அணிந்துகொண்டனர், எனவே உருத்திராக்கம் என்பது; உருத்திர மூர்த்தம் கொண்ட சிவபிரானது கண்களிலிருந்து பொழிந்த நீரினின்றும் உற்பத்தியான மரங்களிற் காய்த்த ஒரு வகைக்காய்என்னுந்தாற்பரியம் நன்குதெளிவாகின்றது.



இம்மணிகளை, தனியாகவோ, மாலையாகவோ தரித்துக் கொள்ளவேண்டுமென்பது சிவபிரானது ஆக்ஞையாகும்.

தனித் தனியாகவும், கோத்தமாலைகளாகவும் இம்மணிகள் கதிர்காம க்ஷேத்திரத்தில் பெறக்கிடப்பது கண்கூடு.

இவற்றுள் ஆறுமுகங்களைக்கொண்ட மணிகளே மிகச் சிறந்தனவென்ப, கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தினர் தங்களது செபத்திற்கு உறுதுணையாக, செபமாலைகளை வைத்துப் புளங்குவதுபோல, நம்மவரும் உருத்திராக்க மாலைகளை வைத்து முறைப்படி உபயோகித்து வருதல் இன்றியமையாததொன்றாகும்.

பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுவதற்கோ! அன்றேல், காயத்திரி மந்திரத்தை ஓதுவதற்கோ, சரஸ்வதி இலக்குமி, பராசக்தி என்போரை ஆவாகனஞ் செய்வதற்கோ உருத்திராக்க மணியும் மாலையும் அத்தியந்த அவசியமும் தேவையுமானவையாகும்.

மேலும் பில்லி, சூனியம், மாரணம், என்பவற்றை அகற்றவோ! அன்றேல் குட்டித் தேவதைகளாகிய காத்தவராயன், கழுவேறி, மாடன், காளி, பிடாரி, அண்ணமார், ஐயன், ஊத்தை குடியன், உதிர மாகாளி, முனியாண்டி, வெள்ளையன், மதுரை வீரன், கறுப்பண்ணன், நிலம் விறுண்டி ஆதியவனற்றை வெருட்டி ஓட்டவோ! குறித்த உருத்திராக்கமணி, மகா முக்கிய மந்திரமும், கருவியும் சாதனமுமாகும்.

---

# கதிர்காம யாத்திரை விளக்கம்

முன்னரெல்லாம் கூறிய மாட்சிமை நிறைந்த திருக் கதிர்காம ஸ்தலத்தையும், கதிரை மலையையும் அவற்றின் சூழல்களையும் கண்ணாரக்கண்டு கதிபெற வேண்டுமாயின் ஆங்குபோய்ச் சேரவேண்டாமா! ஆம், நிச்சயம் போயே சேரல் வேண்டும்! அங்ஙனம் சேர்வதற்கு வேண்டிய யாத்திரை விபரங்களை நன்கு அறிந்துகொள்ளுதல் பக்தர்கள் யாவரினதும் கடனாகும். எனவே, சிரமத்திற்கு அஞ்சி, பொருள்மிடுக்கால், துணிந்து கரையோரப் புகையிரத மார்க்கமாய், மாத்துறை மட்டும் சென்று, அதன்மேல், அங்கிருந்து மோட்டார் வாகனங்கள் மூலம் செல்வதை விடுத்து, அதிக சிரமத்தோடு கரை மார்க்கமாய், காலடிப்பாதை நெடுகச் செல்லும் யாத்திரையைக் குறித்து ஈண்டு விளக்குவாம்.

குறித்த கதிர்காம க்ஷேத்திரத்தின் முக்கிய விழாவானது ஆண்டுதோறும் ஆடித்திங்களில் ஆரம்பிப்பது யாத்திரிகர்கள் அறிந்த சம்பவமாகும்.

ஈழ நாட்டைப் பொறுத்தமட்டில் குறித்த ஆடித் திங்களுக்கு முந்திய வைகாசித் திங்களில் ஈழத்திலுள்ள அம்மன் கோவில்களில் விழா நடப்பது வளக்கம். அக் கண்ணகி அம்மன் கோவில்களுள், முல்லைத் தீவைச் சேர்ந்ததும், நந்திக்களி ஓரமாக உள்ளதும் வற்றாப்பழைக் கண்ணகி அம்மன் கோயிலாகும், அங்கு திங்களிரவு பொங்கல் முடிந்ததும் அடுத்த நாளன்று, அதிகாலையில் வழி வெட்டப்படும். என்பதனால் யாத்திரைக்குப் புறப்பாடு தயார் செய்யப்படும் என்பதே தாற்பரியமாம். ஈழத்து மக்



களைப் பொறுத்தமட்டில் வற்றாப்பழைக் கண்ணகி அம்மன் கோவில் வழிவெட்டப்படுவது போன்று தமிழ் நாட்டின் ஏனைய இடங்களிலும் கதிர்காம யாத்திரைக்குத் தயார் செய்யப்படுவது சகசம். எப்படியெனினும், நம்மைப் பொறுத்தமட்டில் நமது யாத்திரையை வற்றாப் பழையிலிருந்து புறப்படுவதாகவே வைத்து ஈண்டு விளக்குவாம்.

கதிர்காம க்ஷேத்திரமாம்! கதிரை மலையாம்! கந்தக் கடவுளாம்! கலியுகவரதனும்! என்றெல்லாம் காதாரக்கேட்டு, கனவினிற் கண்டு, கழிபேருவகை பூத்து அதுவோ—இதுவோ, அப்படியோ, இப்படியோ என்றெல்லாம் தவித்துக்கொண்டிருந்த அடியேனுக்கு, கதிர்காம யாத்திரைப் பக்தர்குழாமொன்று நல்ல அதிர்ஷ்டவசமாக முற்கூறிய வற்றாப்பழைக் கண்ணகி அம்மன் கோவில் வீதியில், தென்படலாயிற்று எனவே அக்குழாத்தோடு ஒன்று சேர்ந்து அம்மாளின் உத்தரவு பெற்றுப்புறப்பட்டு, கறவையை நாடி ஓடும் கன்று போலவும்; நீர்வேட்கையால் தவித்து ஓடும் மான்கூட்டம் போலவும் கருத்து முழுவதையும் கதிரை மலையான்பால் இருத்திச் செல்லலானேம். அங்ஙனம் செல்லும்பொழுது அழும்பில் முனையைக் கடந்து செம்மலை என்னுமிடத்தைக் கிட்டிச் சேர்ந்தோம். அங்கிருந்து முறையே கொக்குத் தொடுவாய், கொக்கிளாய், புல்மோட்டை என்னுமிடங்களைத்தாண்டி திரியாய் என்னுமிடத்தைச் சேர்ந்தோம். அங்கு தாராளமாய்த் தங்கி, திரியாய் விக்கினேஸ்வரனை வழிபட்டதோடுகூட, திரியாய் மலை என்னும் பிரசித்திபெற்ற அக்காலத்து மலைக்காட்சியினையும், அம்மலையின் ஓர் பாகத்திலே வீரசிங்கன் என்னும் வீரன் தங்கியிருந்த குகையினையும் அக்குகையின் மருங்கிலுள்ள அற்புதமான இரண்டு குளங்களையும் தரிசித்து சந்துஷ்டி அடையலானேம். அதன் மேல்

அங்கிருந்து யாத்திரை புறப்பாடாகி, புடவைக்கட்டு, என்னும் துறையைத் தாண்டி குச்சவெளி என்னும் கிராமத்தை அடைந்தோம். கதிர்காம யாத்திரிகர்களை வரவேற்று ஆதரித்து விருந்தோம்பும் பெருந்தன்மையாளரும், பகிரங்க வேலைப்பகுதி ஓவசியருமான புண்ணிய புருஷோத்தமரின் சகாயம்பெற்று, குச்சவெளியிற்றங்கி அதன்மேல் மெதுவாக நடந்து கும்புறுபிட்டிக் கிராமத் தலைவரது இல்லத்தையடைந்தோம். அன்னாரது பெருந்தன்மை வாய்ந்த வாக்காலும் போக்காலும் இளைப்பும் களைப்பும் நீங்கப்பெற்று இறக்கக்கண்டி என்னுந் துறையைத்தாண்டி, நிலாவெளி என்னும் குறிச்சியைக் கண்ணுற்றோம். அங்குள்ள கடைவீதிகளிலும் கனவான்களது இல்லங்களிலும் விருந்தோம்பப்பெற்று அங்கிருந்து இருமருங்கிலுமுள்ள காடுகளுக்கூடாக சாம்பற்றீவைத்தாண்டி, உப்புவெளி என்னுங் கிராமத்தை அடைந்தோம்.

உப்புவெளியைக் கண்டதும் தப்பு வழி கண்டாலொப்ப எமக்கிருந்த பல்வேறு கஷ்டங்களும் சிரமங்களும் பரிதியைக் கண்ட பனிபோல ஒருங்கே தொலைந்தன என்னுமாறு துள்ளி ஆடக்கூடியமுறையில், சோபிதமான சரித்திரப் பிரசித்திபெற்ற கோணேசர் மலையானது கண்முன்னே தோன்றி நல்வரவேற்று நலிவை நீக்கி வலுமை ஆக்கி எம்மையெல்லாம் ஊக்குவதாயிற்று. குறித்த கோணேசர் மலையின் கண்ணே குடிகொண்டருளும் சுவாமி சந்நிதியில் அட்டாங்க நமஸ்காரமாக வீழ்ந்து அன்னாரது திருப்பாதங்களைத் தொழுது விடையும் நடையும் பெற்று அப்பால் பாலம் போட்ட ஆற்றைத் தாண்டிச் செல்லலானோம். அவ்வாறு சென்றோமெனினும் திருக்கோணேசர் மலையும் இராவணன் வெட்டும், திரிகோணமலை ஒதுங்கு குடாவின் உலகறிந்த வனப்பும், சீனன்குடாவின்



செப்பொணாச் சிறப்பும், திரிகோணமலைப் பெரிய கடை, சின்னக்கடை என்பவற்றின் நாளங்காடிகளின் நவிலொணாச் சிறப்பும் எமது காலடிகளை உந்தவிடாது பிந்தவே இழுத்து நின்றன; சென்றிட்ட நோக்கம் குன்றாவாறு, கந்தன் கருணையால் தொந்தம் நீங்கி பந்தம் போக்கிட சந்தம் பெற்று உந்தி, உந்தி செந்நெற் கழனிகள் தேங்கிநின்று செழுமையும் கொழுமையும், அளிக்கும் வளம்பெறு நாடாகிய தம்பலகமத்தை, வெம்பலின்றி கும்பலாய்ச் சேர்ந்து பைம்பலாயிருந்தோம். பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தனாகிய கோணேசப் பெருமானது திருக்கோவிலானது ஆங்கு காட்சியளித்து நிற்கும் மாட்சிமையையும், சூட்சியையும், எவர்தான் சொல்லவல்லார்! மதுரையைத்தானும் பழித்த வனப்பு வாய்ந்த திருப்பணி கொண்ட நம் கோணேசர்கோவிலானது குறித்த தம்பலகம நாடு முழுவதற்குமே அம்பலக் காட்சியளித்து அதியுன்னதமாக ஓங்கி நிற்கும் அற்புதம் நிகரில் அற்புதமாமென்க!

அவனது திருக்கடைக்கண்ணோக்கப் புண்ணிய பலனுக்கும்! பசித்தார்க்கெல்லாம் பசைசேர் அன்னம் நசைவாயளித்து திசை திசை தோறும் இசையைப் பெருக்கிய தம்பலகமம் இத்துணைப்பாராட்டுக்கும் சீராட்டுக்கும் உரிமைத்தாயிற்று! குறித்த **கோணேசப் பிரானது** திருச்சந்நிதியை அடைந்து அவனது தூலலிங்கக் காட்சியாற் பூரித்து அதன்மேல் அவனது மூல லிங்கம் கண்டு அஞ்சலித்து அப்பனே அபயம்! அபயம்!! ஆதரித்தருளல் வேண்டும் எனக்குறையிரந்து முறையிட்டு அழுத கண்ணாலும் சிந்திய மூக்காலும் ஆங்குப்பெற்ற அருட் சக்தியோடு அடி பெயர்ந்து அப்பாற் போந்தனம், போந்த நமக்கு, **துளக்கோட்டு** மகா முனிவனை நினைவூட்டி, கரை துறை காணாது பெருகிக் கடலையும் பழித்து நிற்கும் **கந்தளாய்க் குளமானது** அண்மை

யிலும், தண்மையிலும் கண்ணெதிரே வண்ணமாய்த் தென்படலாயிற்று. இளைத்த யாங்கள், குளத்துக் கொண்ட வளத்தைக்கண்டு தளப்பம் நீங்கி தங்கி இருந்து குளத்தை ஒட்டிய பூர்வீக சரித்திரங்களை அளவளாவிக் கலந்து பேசி மனக்கலிதீரப்பெற்று அப்பால், **மகாவலி கங்கையென்னும்** ஈழத்துப் பல்லாறுகளுள் ஒன்றாய வல்லாறும் நல்லாற்றினைக் கண்டேம்,

மகாவலி கங்கை யல்லவா! சிங்களக் கூற்றின்படி இது மணல் நிறைந்த பெரிய ஆறு ஆதாவது மகா என்பது பெரிய எனவும்; வலி என்பது மணல் எனவும்; கங்கை என்பது ஆறு எனவும் பொருள்படும். எனினும் நமது கூற்றின்படி மகாவலி கங்கை என்பது பெரிய வலிய ஆறு என்பது பொருளாகும். எக்கூற்று எங்ஙனமாயினும் ஆகட்டும்! குறித்த கங்கையில் யாமெல்லாம் எமது சிரமங்கள்தீர, நீர்குடைந்து தீர்த்தமாடி ஆங்குள்ள சித்திர வேலாயுத ஸ்வாமியைத் தரிசித்து சொல்லாரத்தோத்திரித்து செல்லும் போதில் **நீலப்பழை, கங்குவேலி, மல்லிகைத்தீவு, கிளிவெட்டி** என்னும் வெவ்வேறு ஊர்களைக்காணலானேம், கிளிவெட்டி என்னும் கிராமத்திற்கப்பால், **அரிப்பு, ஆனைத்தீவு, சேனையூர்** என்பவற்றைக் கடந்துசென்ற எமக்கு, புராணப் பிரசித்திபெற்ற வெருகல் என்ற ஊர் குறுக்கிடலாயிற்று. இந்த **வெருகல்** என்னுமிடத்தில், வள்ளிக் கணவனாகிய வேலவனது மேன்மை தங்கிய திருக்கோவில் ஒன்று உளது. தீப, தூப நைவேத்திய, பூசை திருவிழாக்களாற் பிரசித்தி பெற்ற இக்கோவிலினது சந்நிதியில் சற்றுநேரம் நின்று வேலனைவழிபடக் கருதிய யாம் பற்றுநீக்கி, முற்றுமே நின்று அவனது அருட் பிரசாதங்களைப் பெற்றுப்போகும் பெரும்பேறு கிடைக்கப் பெற்றேம். அங்ஙனம் பெற்றுப் பெயர்ந்ததன் மேல் **நல்லதண்ணீர்ப்பாலை**, தாண்டி **வேட்டாறு** என்னுமிடத்தை அடையலானேம்.



இவ்வேடவாற்றுப் பக்கத்தில் வேடர், குறவர் என்பாரை காணும் சலாக்கியம் எமக்குக் கிடைக்கலாயிற்று. முழு நிர்வாணம், அரை நிர்வாணம், தாடி, சடை, உள்ள வேடர்கள் ஒருபுறம், பூனை குத்தி விருந்திடும் புனக் குறவர் மறுபுறம், இங்ஙனமாக நானாவிதக்காட்சிகள், களிப்புக்கள் மத்தியில் எம்பிரானது இணையடிகளை மறவாது அவனது திருநாமத்தையே உச்சாரணம் பண்ணிக் கொண்டு சென்ற நம்மை **உப்புக்கொட்டு, காரைமுனங்கு** என்னும் சிற்றூர்கள் வழிமறிக்கலாயின. எனினும் அவற்றிலெல்லாம் அதிகம் காலம் தாழ்க்காது முன்னேறும்போது பசுமை நிறைந்த சோலைகள் செறிந்த **வாழைச்சேனை** என்னும் பேரூரானது முற்படலாயிற்று. அவ்விடத்தே பதமாய்க் காய்ச்சி பணம் ஒன்றுக்கு விற்ற பசுவின் பால் போத்தல் ஒன்றுவாங்கி அருந்திக்களைதீர்ந்து அதன்மேல் **முருவோடை, கிரான் வெளி,** என்னும் ஊர்களைக் கடந்தேம், கடந்த நமக்கு, தங்கவேண்டிய இடமாக **சிற்றாண்டிகுடியிருப்பு** எதிர்ப்படலாற்று அது, ஆறி அமர்ந்து தங்குவதற்கு வசதியான ஓர் கிராமம். அங்கேயும் பிரசித்திபெற்ற கந்தஸ்வாமி கோவில் ஒன்று உண்டு. காகம் இருக்கப் பனம் பழமும் வீழ்ந்தாற்போல, நாமும் போக அங்கு அந்நாட்கள் திருவிழா நாட்களாக இருந்தன. அருவிழாவாகும் திருவிழாவென்னும் பெருவிழாவை எவர்தாம் புறக்கணிப்பர்! முடியவே முடியாதன்றோ! இரண்டொரு தினங்கள் ஆங்கு நடைபெற்ற திருவிழாக்களிற் பங்குபற்றி, கந்தப்பிரானை கண்ணாரத் தரிசனைசெய்து, அவனிடத்து நற்செலவு பெற்று சென்ற யாம் **வந்தாறுமூலை கொம்மாதுறை, செங்கல்லடி** என்னுங்கிராமங்களை முறையே கடக்கவேண்டியவர்களானேம். செங்கல்லடியில் வதுளைக்குத் திரும்பும் சந்தியில் தாராளமாக தங்கித் தரித்து அப்பால் அங்கிருந்து ஒருமைல் தூரத்திலுள்ள **ஏறாவூர்** என்னும் பெரும் கிராமத்தை அடைந்தேம். குறித்த ஏறாவூரும், அங்குள்ள கடைவீதிகளும் எவ்வித தேவைகளுக்குமேற்ற முறையில் அமைந்துள்

ன்ன. அங்கும் சைவத் தமிழபிமானிகள் உளராகலின் நமது தட்டுக்கேடும், முட்டுப்பாடும், நீங்குமட்டும் ஆதரிக்கப்பெற்று தங்கி முசிப்பாறி அதன்மேல் **ஆறுமுகத்தான்குடியிருப்பு, மயிலம்பாவெளி, தன்னாமுனை, ஊறணி, அமிர்தகழி** ஆகிய கிராமங்களைக்கடந்து மட்டக்களப்பின் புறநகராகிய **கோட்டைமுனையைச்** சேரலானோம். இதுவே மட்டக்களப்பின் திறவுகோலாகும்.

**கோட்டைமுனை** என்பது காட்சிக்கு மிகமிக வனப்பும், வளமும், செறிந்த இடமாகும், மட்டக்களப்பு வாவியினது பாலத்திற்கு இப்பால் உள்ளது கோட்டைமுனை எனவும் அப்பால்உள்ளது **புளியந்தீவு** எனவும்வழங்கப்பெறும் பாலத்திற்கு இப்பாலோ, அன்றேல் அப்பாலோ இரவிற்படுத்துறங்கும் மக்களுக்கு, விசேஷமாகக் கருத்துக் கூர்ந்து கவனிப்பாருக்கு மட்டக்களப்பு வாவியிலுள்ள பாடும் மீன்களது இசையானது நன்கு புலனாகும் என்பது ஐதீகமாக இருக்கவும் அவற்றையெல்லாம் செவிப் புலனுக்கும் பாக்கியமானது எமக்குக் கிடைக்கப்பெற்றது, யாத்திரைப் பலனின் ஒரு பாகமாகும் என்றே சொல்லவேண்டும்.

கோட்டை முனையைக் கடந்தபின் எதிர்ப்படுமிடங்கள் வெகுதூரத்திற்குக்காடும் காடு சார்ந்தனவுமாதலின் அவற்றாலேற்படக்கூடிய சிரமங்கட்கெல்லாம் வேண்டிய நடைப் பரிகாரங்களைக் கோட்டைமுனையோடொன்றிய **புளியந்தீவு** என்னும் மட்டக்களப்புப்பட்டினத்திலேயே பரிபக்குவம் செய்துகொண்டு அப்பாற் சென்றோம். கோட்டைமுனையைச் சார்ந்த **தாமரைக்கேணிக்** கூடாகச் சென்ற நமக்கு, அதுவும் காடு கரம்பைகளும், கானல் வெளிகளும் கடந்து நெடுந்தூரம் சென்ற நமக்கு திறந்த வெளியும் நிறைந்த காட்சியும் பரந்த தென்றலும் ஒன்று சேர்ந்த **கல்லடிப்பாலமானது** எதிர்ப்படலாயிற்று. அழகான அப்பாலம் நெடுக இருமருங்கும் பார்த்த வண்ணமாயும் சுத்த ஆகாயத்தினைச் சுவாசித்த



வண்ணமாயும் நடந்து அக்கரை சேர்ந்தோம். அதன் மேல் கல்லடியூர் வழியாக சிவானந்த வித்தியாலயப் பக்கமாகச்சென்று கொண்டிருந்த நமக்கு, திடீரென, சில ஆண்டுகளுக்கு முன்னர் சிவபதமடைந்த சிவாநுபூதிச் செல்வரும், மட்டக்களப்பு அன்னையாரீன்ற மாதவ யோகியும், செந்தமிழ்த் திருவாளரும், யாழ் நூல் யாத்து தமிழ் உலகுக்குத்தந்த பெருந்தகையாரும், வட தென் மொழிகளின் கடலினைக்கடைந்து நவநீதங்கண்டு தாமே அருந்தியும் நம்போலியர்க்கு அருத்தியும் நின்ற சாரதாபீடமாகிய **ஸ்வாமி ஸ்ரீமத் விபுலானந்த அடிகளது** நினைவு உதிக்கலாயிற்று. அன்னாரது நினைவூட்டும் தம்பமாக, குறித்த வித்தியாலயமானது அங்கு காட்சிதந்து, கலை ஒளிவீசி கவின்பெற நின்று நிலவுதலின், யாமும் நின்று இறை அடி பணிந்து அடிகளது ஆன்மாவானது சாந்திபெறுமாறு உபாசனைசெய்து உடலம்புளகிக்கப் பெயர்ந்து அப்பாற் சென்றனம்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பல்வேறு குடி இருப்புக்களுள், குடிசனம் நெருங்கிய குடியிருப் பெனக்கூறப்படுகின்றதும். ஐந்து குறிச்சிகளை உடையதுமான முஸ்லீம் கிராமமாகிய காத்தான்குடியிருப்பைக் கண்டோம்; கடைகளும், கட்டிடங்களும், கழகங்களும், பள்ளிவாசல்களும் ராட்டின ஊஞ்சல்களும், அள்ளி வீசிய அழகானது உண்மையில் நமது கண்களைக் கவர்ந்ததோடுகூட குளிர்ச்சியையும் அளிக்கலாயிற்று; அதன் பெறு பேறாக புதிய உற்சாகமும், உணர்ச்சியும், கிளர்ச்சியும் அடைந்து, மஞ்சந்தொடுவாய், தாழங்குடா, புதுக்குடியிருப்பு,கிரான்குளம், குருக்கள் மடம், செட்டி பாளையம், தேற்றாத் தீவு என்னும் இடங்களைத் தனித்தனியே தாண்டிக் **களுதாவளையைக்** கிட்டிச் சேர்ந்தோம்,

முற்கூறிய சித்தாண்குடி, ஏறாவூர்,கோட்டைமுனை என்பவற்றை ஒப்ப, களுதாவளை என்பதும் மிக, மிக முக்கியமான ஒரு பெருங் கிராமமாகும்; எனவே, அங்கு நாமெல்லோரும் ஒரு இராப்போழ்து முழுவதையுமே பக்தி பரவசமாகக் கழித்து, அடுத்த நாள் அதிகாலையில் புறப்படலாயினோம்.

ஒல்லாந்த அரசர் காலத்தவராகிய ஒந்தாச்சி என்னும் பெரியாரின் பெயரால் வழங்கப்பெறுகின்ற ஒந்தாச்சி மடத்தினைக் கண்டோம். அதைக் கண்டதும், நம்மோடு சகிதமாகச் சென்ற அறிஞர் ஒருவர், ஒந்தாச்சி என்பவரது சரித்திர சம்பந்தமான சம்பவமொன்றை எமக்கு எடுத்துரைக்கலானார். 1707ம் ஆண்டு முதன் முதலாக ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்திலே, தோம்பு எழுதப்பட்ட போழ்தில் அங்ஙனம் எழுதிய அக்காலப் பெரியார்களுள், ஒந்தாச்சி என்பவரும் ஒருவராக இருந்தார் என்பதே அச்சம்பவமாம். ஆம்! ஏறத்தாழ 250 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட தோம்பில் எழுத்தாளராகப் பங்குபற்றிய ஒந்தாச்சி என்பவரும் ஒருவராகஇருந்தார் என்ற செவியறிவினை, கட்புலனோடு இயைத்து காணக்கூடிய சலாக்கியத்தைத் தந்த ஒந்தாச்சி மடத்தினை உற்றுநோக்கி உவகைபூத்து, அதையும் தாண்டி, **நல்லாறு** என்னும் பெருங்கிராமத்தைச்சேர்ந்தோம். நாமுஞ்சேர மைமலுமாயிற்று. அங்குள்ள ஓர் பாடசாலை மண்டபத்தில் அதி சௌகரியமாகத் தங்கியிருந்தோம். "நாடு நமக்குண்டு கேட்டதெல்லாந்தர" என்ற பட்டினத்தடிகளது பொன்மொழிக்கேற்ப அங்குள்ள சில சைவ அபிமான மகான்களது ஆதரவுபெற்று நன்றாக உண்டுகளித்து, உறங்கி, இறைவனருளால், இனிதாக எழுந்து, எழுந்தொறும், இருந்தொறும், நடக்குந்தொறும்" கந்தன் திருவடி சிந்தையிலிருத்தி முன்னேறலானோம்; **நீலாவணை, மருதமுனை,** பாண்டிருப்பு இவற்றைக் கடந்தோம். மட்டக்களப்பு முழுவதிலும் சுகஸ்தானமென பிரசித்திபெற்றதும் பல்வழங்களும் பொலிந்ததுமாகிய **கல்முனை** என்னும் கல்முனைப் பட்டினத்தைக் கண்டோம். நமக்கு முன்னும் யாத்திரிகர், பின்னும் யாத்திரிகர், பட்டினத்துக் கடைகள் முன்னும் யாத்திரிகர், பாதைகளிலும் யாத்திரிகர், மரங்களின் நிழல்களிலும் யாத்திரிகர், சூழல்களிலும் யாத்திரிகர். இங்ஙனமாக, கதிதருவேனென்று திருநாளைப்போவாரை கை காட்டி அழைத்த தில்லை



வனத்துச் சிற்றம்பலவனது நால லிங்கத்தினை ஒப்ப, கல்முனை விஸ்கால் கந்தோரிலிருந்து நம்மை நோக்கி ஒருகையானது காட்டிவம்மின் வம்மின் என அழைக்கலாயிற்று எதுவோ! எதற்கோ எனப் புலனாகாது காட்டியழைத்தகையின் திசையை நோக்கி செல்லலானோம். அண்மையில்சென்றதும் நம்மை அழைத்தகையானது, கல்முனைச் சைவ மகாசபைக் காரியதரிசியாக அமர்ந்து தொண்டாற்றிய திருவளர் செல்வன் **க.த. இராசா அவர்களது** திருக்கையே என்பது புலனாயிற்று, அன்னாரது மங்களமனையில் வரவேற்று சிற்றுண்டிகளால் ஆதரிக்கப்பெற்று முசிப்பு ஆறியபின் கல்முனைக்கு அண்மையிலுள்ள **அம்பலத்தடிப்** பிள்ளையார் கோவிலில் அமைந்திருந்த கதிர்காமத் தொண்டர் மடத்தினுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு கந்தப் பஜனையும், வழிபாடும் பிரசங்கமும்செய்து அந்த அல்லிரவை நல்லிரவாகக் கழித்து அதன்மேல் கந்தன் சிந்தை முந்த முந்த எந்த விநாடியும் உந்திக்கொண்டிருந்ததால், பொழுது உதயமானதும் புறப்பட்டு கரவாகு, காரைதீவு, நிந்தவூர், செங்கற்படை பாலமுனை, ஒலுவில், என்னும் ஊர்களைத்தாண்டிச் சென்றோம்.

நமது ஆப்தநண்பரும், தலைமைஆசிரியருமான ஒருவர் **அட்டாளைச்சேனை** ஆசிரிய கலாசாலையிலிருப்பது ஞாபகத்திற்கு வந்தமையால் சற்றுத் தீவிரமாக நடந்து அக்கலாசாலைக்குச்சென்றோம். அவரும் ஓர் அரிய முருகதாஸன் ஆனமையால் எம்மையெல்லாம் உருக! உருக!! வருக! வருக!! எனக்கூறி நீட்டியகரங்களால் வரவேற்று முகமலர்ந்து உபசரித்து ஆதரித்து வைத்தார். அங்கிருந்து அக்கரைப்பற்றை அடைந்தோம். அங்கும் பாடசாலை மண்டபத்தில்தங்கி, தரித்து அங்குள்ள வைத்தியசாலையின் வைத்தியோத்தமராலும், குறித்த பாடசாலை ஆசிரியராலும் இனிது உபசரிக்கப்பெற்று ஆறுதலான அயர்ந்த நித்திரை செய்து மீண்டும், விடியற்காலையில் கந்தனது பாத கமலங்களைக் கருத்திற் பதித்து, புறம்போந்து, கருங்கொட்டித்தீவு, **கோளாவில்,** பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில் என்னுமூர்களைக் கடந்து

சென்றோம். அடுத்தவூர், திருக்கோவில் எனக்கூறினர். அனுபவம்முதிர்ந்த பழைய பக்தரொருவர். அதைக் கேட்டதும், “திருக்கோவிலில்லாததிருவிலூரும்” என்னும் தேவாரம் உடனே நினைவிற்கு வந்தது சிறிது தூரம் சென்றதும் திருக்கோவில் என்னும் ஊர் மார்க்கமாக அடிவைத்துத்துச் சென்றோம். கடற்பக்கமாய்த் திரும்பிப் பார்த்தோம், பார்த்த மாத்திரத்தே, சீதா பிராட்டியாரது தேரைப்பற்றிய ஞாபகம் வந்தது, அத்தருணம் அத்தொடர்பில் இராம, இராவண, யுத்தத்தைப்பற்றிச் சம்பாஷிப்பதற்கு ஓர் பெருஞ்சந்தர்ப்பமாயிற்று, சம்பாஷித்த வண்ணமே நடந்துசென்ற நமக்கு கடற்காற்றும் அலைகளின் பேரொளியும், நண்பர்களது முருக தோத்திரப் பாடல்களும், புத்தம் புதிய உற்சாகத்தினை ஊட்டிக் கொண்டே இருந்தன. அதே பராக்கில், கோரைக்களப்பு, கோமாரி, பொத்துவில் என்னும் இடங்களைத் தாண்டி பாணகை என்னும் ஊரைச் சேர்ந்தோம், குறித்த கோமாரி, பொத்துவில், பாணகை, என்னுமூர்கள் அடர்ந்த காடுகளின் அண்மையில் இருப்பதும், யானைகளது தாண்டவங்களை அடிக்கடி அநுபவ வாயிலாகக் காண்பதும் பொதுவாக அநேகரறிந்த ஓர் உண்மையன்றோ!

அவ்வுண்மைக்குச் சான்றாகத்திடீரென ஓர்யானைப் படையினை அடியேமும் பாணகை மார்க்கத்தில் சந்திக்க நேரிட்டது. ஐயகோ! கந்தா!! என்றோம்; வந்தாள்! என்றோம்; வேல்! வேல்!! என்றோம், அம்மம்ம! கதிரவன் கண்ட காலைப்பனிபோல் களிறும், பிடியும், பிளிறு குழாமும், பெயர்ந்து திரும்பி பெருங்காட்டினூடே மாயமாய் மறையலாயின.

இதுதானோ தில்லைத்தலம்! இத்தனை நாளு மறியேன், என்று கவித்துச்சென்ற நந்தனாரை ஒப்ப கதிர்காமத்தலம் இன்னும் எவ்வளவு தூரமோ என அடியேமும் அங்கலாய்த்துச் சென்றோம், அங்ஙனஞ் சென்ற நமக்கு, கலங்கேல்! கலங்கேல்!! கதிதருவேன், கடுகி வருக! என்று கதிர்காமக் கந்தன் தனது பன்னிருகரங்



களையும் பரிவோடு காட்டி நம்மைக் காதலோடு அழைப்பதுபோல கற்பனை உலகில், தோன்றலாயிற்று. அவனது கரங்களைக் கண்டோம், சிரங்களைத் தாழ்த்தி வரங்களை வேண்டி, கால்களை உதறிக் கடுகெனச் சென்றோம் சந்நியாசிமலை எதிர்ப்படலாயிற்று. அதைக் கண்டதும், சந்நியாசி வேடங்கொண்ட ஆண்டி முருகனை வேண்டி, வேண்டி, அவனது கதிரை மலையானது சமீபிப்பதற்கு நேரம் நெருங்கிவிட்டது போலும் என, உள்ளங் களித்துத் துள்ளிக் குதித்து, நம்மையே மறந்து பரவசமாகிச் சென்றோம். உகந்தமலை என்னுமூரும் ஆண்டு எழுந்தருளியுள்ள வேலவர் திருச்சந்நிதியும் தென்படலாயின. உகந்த மலையைவிட்டு, பிரிந்து செல்லவோ கடுகளவேனும் நாட்டம் வராமைகண்டு அங்கு சிற்சில அற்புதங்களைக் கண்ணுற்றோம்.

கொங்குதேர் வாழ்க்கை, அஞ்சிறைத் தும்பிகள் தேனவிழ்த்து செவ்வழிப்பண்களைப்பாடிக்கொண்டிருக்கும் மலர்கள் அடர்ந்த தாமரைத் தடாகங்கள் அங்கு உண்டு. நமது பழவினைகள் யாவும் பாறும் வண்ணம் அங்கு ஓர் தடாகத்தில் மூழ்கி, அதன் நிறைந்த நீரின் மறைந்த ஆழத்திலே பவவினைகளை ஆழ்த்திக் கரையேறினேம். அங்குள்ள முருகப் பிரானது, ஆலயத்தினுட்சென்றோம், வனவேடர்கள் தேனுந் தினைமாவுங் குழைத்து மாவிளக்கேற்றிப் பூசனைகள் செய்வதைக் கண்ணுற்று, கைகூப்பி வணங்கி நின்றோம். வள்ளி தெய்வானை மணாளனே என்று வாழ்த்தி வழிபட்டு நின்ற எமது மனத்துயர்களையெல்லாம்மாற்றி, அஞ்சேல்! அஞ்சேல்!! எனக்கூறி அபயமளித்த முருக வேளிடத்து விடைபெற்றுக்கொண்டு நடையைத் தொடங்கினேம். பூமுனைக்கு அப்பாலுள்ள புதுவெளிதென்படலாயிற்று. இவ்வெளியானது, தென் மாகாணம், கீழ் மாகாணம் ஆகிய இரண்டனுக்கும் எல்லையாக விளங்கி நிற்கும் கும்புக்கன் என்னும் ஆற்று வெளியாகும்.

கொடிய வனவிலங்குகள் நெருங்கியுள்ள அடர்ந்த காட்டு மார்க்கமாய் நீண்டதூரம் நடந்து சென்றுகொண்

டிருந்த நமக்கு, கும்புக்கனாற்றுப் புது வெளியானது, அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரம்பொருளாகிய இறைவனது அப்பெரிய அருள்வெளியைக் கண்டாலொப்ப பேரின்பத் திருவமுதை ஊட்டி, ஊட்டி, தெவிட்டாது நின்று கொண்டிருந்தது. அங்ஙனமாக அவ்வெளியைக் கடந்து சென்றுகொண்டிருந்த நமது இதயத்தே ஊற்றெடுத்துப் பாய்ந்தனவாகிய சிற்சில பேருணர்ச்சிகளை ஈண்டு எமது வாசகநேயகர்கட்குக் கூறிப்போதல் சாலச் சிறந்ததாகுமெனத் துணிந்தமையின் அவற்றைச் சிறிது கூறி அப்பாற் செல்வாம்:—

"முக்குணம் புலனைந்துட னடக்கி
மூல வாயுவை எழுப்பிரு வழியைச்
சிக்கெனும் படியடைத் தொருவழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலியுடன் போய்த்
தக்க அஞ்செழுத் தோரெழுத்துருவாந்
தன்மை கண்டருள் தரும் பெருவெளிக்கே
புக்கழுந்தினர் எமதுருப் பெறுவார் புவியில்
வேட்டுவ னெடுத்த மென்புழுப்போல்"

என்று மாணிக்கவாசக சுவாமிகள், திருப்பெருந்துறையிற் பெற்றனுபவித்த யோகசாதன உபதேசக் கவியிற் கண்டுள்ளவாறு, குறித்த புதுவெளியினது நடைநிகழ்ச்சியை ஒப்ப நோக்கிக் கற்பனைசெய்து உள்ளம் பூரிக்கலானேம்! உண்மையில் அந்தப் புதுவெளியை, அருள்வெளியென்றே வழிக்கொண்டு சென்றோம்; அவ்வெளி நெடுகப் புக்கழுந்தினேம், கந்தனுருவைப் பெறுவான் வேண்டிக் காதலித்து முன்னேறினேம்.

பெண்ணாகி வந்து, ஒரு மாயப் பிசாசம் பிடித்திட்டு, கண்ணால் வெருட்டி, முலையால் மயக்கி, கடிதடத்துப் புண்ணாங்குழியிடைத் தள்ளத் தள்ள அத்தள்ளுக்களால் உந்தப்பெற்றுச் சிற்றின்பச் சேற்றின் ஆழத்தில் மூழ்கி அதன் விளைவாக அங்கமெல்லாங் குறைந்து அழுகு தொழுநோயனாய் அவதியும், அல்லலும், தொல்லையும் பட்டுக்கிடந்த அருணகிரியென்பாரை அரவணைத்து, ஆட்கொண்ட அந்தப்பெருமான், புது வெளி நெடுகப் புக்கழுந்து மெம்மைக் கடைக்கணித்து



இன்னல் தீர்த்து ஈடேற்ற மாட்டானோ? என்னும் துணிவோடு குறித்த வெளியைக் கடந்து சின்னவாகுவூர், பொத்தனை வியாளையூர் என்னுமிடங்களுக்கூடாகச்சென்றேம், முருகப்பிரானது ஸ்தலங்கள் பலப்பல உண்டு எனப் பலர் கூறி இருக்கவும், எண்பத்தைந்து ஸ்தலங்கள் என அருணகிரிநாதர் தமது திருப்புகழிற் கூறியிருக்கவும் அவற்றை எல்லாம் கண்டுகளிக்கும் பூர்வ புண்ணிய பலன் கிடைக்காத நாயேம் கடைசியாய்க் கதிரை மலையைக் காணலானேம்.

மருதம், முல்லை, நெய்தல், பாலை என்னும் நால்வகை நிலங்களையும் கடந்து சென்ற அடியேம், கந்தப்பிரானது முல்லையும், குறிஞ்சியும், சேர்ந்தாற்போன்றதாகிய கதிரை மலையினது இருப்பையும், உயர்வையும், பருமனையும், சூழல்களையும் கண்ணுற்ற மாத்திரத்தே, கண்களானவை அருவி வீழ்த்தி நிற்க, உடலஞ்சிலிர்த்து, பரவசமாகி, சித்திரப்பாவைகளை ஒப்ப மெய்மறந்து செய்வதறியாது நெடு நேரம் நிற்கலானேம்.

ஆடைகழற்றிய அரவம் போலும்! சிப்பியில் நீங்கிய முத்துப் போலும்! பழுக்கக் காய்ந்த பவுனைப்போலும்! மயிர்களைந்து, வடிவம் மாறி, மனோகரமான வண்ணாத்திப் பூச்சிபோலும், புத்துர்ணவும், புதுக்கோலமும், பெற்றுப் பூரிக்கலானேம்.

புதிரே போன்ற பழமுதிர் சோலைக் கதிர்காமத்தினை எதிரேகாண இன்னமும் நீண்ட வழி இருந்ததால் மீண்டும் அதிகமான வனங்களைக்கடந்து, வள்ளி நாயகியின் நெல் வயலினையும், அதற்கப்பால் நதியொன்றினையும், கட்டகமம், என்கின்ற இடத்தினையுந் தாண்டிச் செல்லலானேம்.

கட்டாக்காலிகளாய் இட்டம்போல அட்டாதுட்டி செய்யும் துட்ட விலங்கினங்களாய யானை, கரடி, புலி, முட்பன்றி என்பன மலிந்த, வனங்களைக் கடந்து தம்பியின் விக்கினங்களைந்த தும்பியாகிய கும்பியன் என்னும் விக்னேசுரப்பிரானின் திருவருளாற்சென்ற நமக்கு இறைவனது கழலருமைகண்டு இன்னல் தீர்க்குமாறு வானை அளாவி ஓங்கிய மருத மரங்களின் நிழலருமை கிடைக்கலாயிற்று. குறித்த இம்மருத மரங்களானவை

மாணிக்க கங்கையின் இருமருங்குகளிலும் யாத்திரீகர்கட்கும் கங்கைக்கும் குளிர்தரும் பொருட்டு வரிசைபெற நிற்பனவாம். இங்ஙனம்நிற்கும் இம்மரங்களானவை அற்புதகரமாக, கந்தப்பிரானது கருணைப்பெருக்கால்முளைத்துள்ளனவோ! அன்றேல், அவன்பாற் கொண்டுள்ள ஆர்வமேலீட்டால் இயற்கை அன்னையானவள்தானே அவற்றை முளைப்பித்தனளோ! அதுவுமன்றேல்—பண்டைக்காலத்துப் பக்தர் குழாங்களுள்எவரேனும் அவை முளைப்பதற்குக் காரணபூதராயிருந்தனரோ யாமறியேம்! எவருமறியார்!, அறியவே வல்லரல்லர்! எது எங்ஙனமாயினும், ஆகுக.

நிற்க யாத்திரை மார்க்கமாக, அதிகம் நீண்ட தூரத்திற்கு, அதிகமான கஷ்ட சாத்தியத்தோடு எறும்பின் கூட்டம் போன்று இணைபிரியாது சென்ற யாத்திரிகர்களாகிய யாம், பளிங்கினைப்பழித்த காந்தியும், முத்தினைப் பழித்த தோற்றமும், சந்திரனைப் பழித்த தட்பமும் ஒருங்கமையப்பெற்று, பரவையாக ஓடாநிற்கின்ற முற்கூறிய மாணிக்க கங்கையில் ஸ்நானம் பண்ணி, குறித்த யாத்திரையாலேற்பட்ட சகலவிதமான சிரமங்களும் தீரப்பெற்று "புறந்தூய்மை நீராலமையும்" என்னும் நாயனரது பொய்யாமொழிக்கிணங்க, பஞ்சபூதங்களாலாய எமது சரீரத் தூய்மையைப்பெறுமட்டும் பெற்றுய்யுமாறு குறித்த கங்கையின் அக்கரையைச் சேரலானேம். அங்ஙனஞ் சேர்ந்ததும் இனம்பிரிந்த மான்கூட்டத்தினைப்போன்று நாம் யாவரும் தனித்தனியே வெவ்வேறு பிரிந்து சென்றேம்.

கூடி நடந்து, கூடி உண்டு, கூடி உறங்கி, கூடி ஸ்நானஞ் செய்து, கூடி அக்கரையேறிய பக்த சகாக்களின் தாற்பரியம் எதுவாயிற்றோ. அடியேனைப் பொறுத்தமட்டில் யாதேனுமறியேன்! எனினும் நம்பினோரை ஓர் போதும் கைவிடாத குகப்பெருமான் குறித்தபக்த சகாக்களைத் தனது புண்ணியக்ஷேத்திரத்தில் நல்வரவேற்றுத் தனது திருக்கடைக் கண் பாலித்து, வேண்டியவற்றை வாரி இறைத்து மீண்டும் வழிவிட்டே அனுப்பியிருப்பான் என்பது மறுக்கொணாச்சத்தியமாகும்.

# யான் பெற்ற இன்பம்

முற்கூறியவாறு, யாத்திரை மார்க்கமாகச் சென்ற நாயினும் கடையேனாகிய யான் ஒன்றுக்கும்பற்றாதயான்! திடகாத்திர தேகமோ புயவன்மையோ, மனவன்மையோ, வாக்கு வன்மையோ, நிரம்பிய கல்வியோ, ஆத்மஞானமோ, எதுவுமே இல்லாத யான் கேட்ட வாய்க் கேட்டு கந்தப்பிரானைக் கைதொழுது கடைத்தேறிக் கதிபெறச்சென்ற யான்! அற்பமும், குப்பையும், அகதியும், அனாதையுமான யான்! "குரு மொழியே மலையிலக்கு" என்றாற்போல குமரனையே இலக்காகக்கொண்டு நம்பிச்சென்றயான், தீர்த்தமாடி, கார்த்திகேயனை கண்கள் குளிரக்காணுமாறு வீதியிற்சென்று ஆகமவிதிக்கிணங்க வலஞ்செய்து வணங்கி நின்றேன். அங்ஙனம் வணங்கி நின்று, எனது இரு விழிகளினின்றும் கண்ணீர், தாரை, தாரையாகச் சொரிய அழுது, அப்பனே முருகா! அடியவர்க்கெளியா! அடைக்கலந்தாராய்! கடைக்கண் பாராய்! துடைத்தென் கவலையைத் துயரந்தீராய், நம்பிவந்தேன் அம்புவி மீதில், உற்றாரில்லை, உறவினரில்லை, பெற்றாரில்லை, பெரிதும் (வறியேன்) என்று என்னை மறந்து என் செயல் மறந்து தன்னந்தனியே சந்நிதானத்தில் தனித்து நின்று, பெருமூச்செறிந்து பெருங்குரலெடுத்து, பெருமனல் கொண்டு பிதற்றி நின்றேன்.

அம்மம்ம! இங்ஙனமெல்லாம் உறவுக் கோலிட்டு உணர்வுக் கயிற்றால் முறுக வாங்கிக் கடைந்துநின்ற முருகப்பிரான் இரங்காதிருப்பானோ?

இரங்காதிருந்தானோ! இல்லையே இல்லை. கருவில் என்னைக் கண்டவன், கருவில் என்னைக் காத்தவன், உருவில் என்னை வைத்தவன் உண்மையிலேயே உள்ளங் கசிந்து திருக்கடைக்கண் நோக்குவானாயினன். கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அன்று களிக்கவைத்த பாலன்

பாலசுப்பிரமணியன்—இளமுருகன், புள்ளிக்கலாப மயிலேறிய கோலத்தனாய் ஏழையேனுக்கு இரங்கித் தரிசனம் ஈந்து நின்றனன். சின்னஞ் சிறு வயதில் அன்னை தந்தையரை இழந்து ஆதரவற்று அகதியாய் நின்ற எனக்கு, அதுபோதாதென்று கருங்குட்டம் போன்ற பருக்கள் உடல் முழுவதையும் மூடிக் கண்டார் பழித்து அருவருக்கும் நிலையில் கோல்த்தைக் கெடுத்து நின்ற எனக்கு, வைத்தியமெல்லாம் பயித்தியமாகிக் கைவிட்ட நிலையில் கதியற்ற ஏழையாய்க் கலங்கித்திரிந்த எனக்கு கதிர்காமத்துக் கந்தக் கடவுளது அந்தமிலின்பத்து அரும் பெருங் கருணையானது அடியேனை ஆற்றுப் படுத்தலாயிற்று. கும்பிடுபோட்டுக் குளறி நின்றேன். குஷ்டந் தீர்ந்து, கஷ்டம் மாறி, அருளைப்பெற்று, அப்பாற்சென்று, கதிரைமலையினைக் கண்கள்குளிரக் கண்டு களிக்கலாயினேன்.

விபூதி மலையின் விபூதியைப்பெற்று மெய்யெலாம் பூசி வெண்ணிறங் கொண்டேன்.

அவ்வளவுதான்! கதிர்காமத் தீர்த்தமும், விபூதியுமே பெருமருந்தெனக் கண்டேன். கடைத்தேறலானேன், கதிர்காமத்துக் கந்தையனுக்கு நமஸ்காரம்! அரோகரா!

நிற்க பக்திமேலிட்டு, ஆவேசங்கொண்டு, வைராக்கிய மனத்தராய், கதிர்காமக் கந்தனது சந்நிதியில் தங்களது கழுத்துக்களை வெட்டி வரங்கேட்டுப் பழி கிடந்த எத்தனையோ அடியார்கள், மஞ்சள் தோய்த்த துணி கொண்டு கழுத்தில் சுற்றப்பெற்றும், விபூதி பூசப்பெற்றும், சுகமடைந்ததும், சுகமடைவதும் பிரத்தியட்சம்.

வருடந்தோறும் தீர்த்த உற்சவத்திற்கு முன்பதாகவே தீக்குளிப்பதும், குளிப்பாரோடுகூடக் கலியுக வரதனும் அருவத்திருமேனியோடு சேர்ந்து குளிப்பதும் வழக்



கமாயுள்ளதாகும். இம்மட்டா! வழிதப்பி அலைவோருக்கு வழியும்; காணாமற்போவோர்க்குக் காட்சியும்; ஆதரவற்றோர்க்குத் தஞ்சமும்; ஆபத்தினருக்கு இரட்சகனும் எல்லாம் எமது கந்தப்பிரானாகவே இருந்து வருகின்றான்!

அன்பர்களே! நீர்க்குமிழிபோன்று தோன்றி மறைவதும், கனாப்போன்றதும், நாடக மேடையை ஒத்ததும், சந்தைக்கூட்டத்தை நிகர்த்ததுமான இவ்வுலக வாழ்க்கையானது பொய்யே பொய்! என்பது மெய்யே மெய்! இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ திடமுமில்லை. என்னே! வீற்றிருந்தாளன்னை; வீதி தனிலிருந்தாள்; நேற்றிருந்தாள்; இன்று வெந்து நீறானாள்.

“நெருநலுளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ்வுலகு!” நின்றான், இருந்தான், கிடந்தான், தன் கேள் அலறச் சென்றான் இதுவே உலகம்! இதுவே வாழ்க்கை! சில நாளும் பல் பிணியும் கொண்ட இவ்வுலக வாழ்க்கையில் நீவிர் உய்யுமாறெங்ஙன்? இதோ சொல்கின்றேன். ஒரு நாள் ஒருதரமாயினும் கந்தன் நாமம் உச்சரித்திடவேண்டும்! நாளை, நாளை என்பீராகில் நமனுடை முறைநாள் ஆவதுமறியீர், ஒருதரமாவது கதிர்காமப் பெருமான் உறைவிடமாகிய அவனது திவ்ய க்ஷேத்திரத்துக்குச்சென்று திரும்ப மாட்டீர்களா! அந்த யாத்திரையை விரும்பமாட்டீர்களா! அங்கே நின்று கண்ணீர் அரும்ப மாட்டீர்களா! அவனது திருவோலக்கத்தைக் கண்ணுற்று ஆவேசங்கொண்டு ஆனந்தத் தாண்டவம் ஆடமாட்டீர்களா! அவனது உபயபாதங்களைத் தலைமேல் சுமக்க மாட்டீர்களா! அவனது திருப்புகழைப் பக்தி விநயத்தோடுபாடமாட்டீர்களா! நுங்கள் பிறவிப்பயனைத் தேட மாட்டீர்களா! அதுவே ஆனந்தம்! அதுவே பேரானந்தம்! அதுவே சதானந்தம்!

“யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”. “எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் வேறொன்றறியேன் பராபரமே.”

வீரப்ரசண்ட மயிலேறி வருகடவுணீ
வெற்றி வடிவேல் முருகன் நீ
விண்ணாடர் மண்ணாடர் கண்ணாகவே
தொழும் மெய்ஞ்ஞான மெய்ப் பொருளும் நீ
சூரைப்பிளந் தண்டராளப் பதந்தந்த
சுப்ரமணியக் கடவுள்நீ
சோதியே ஆதியே ஈராறுகரமுடைய
தோலாத சேவகனும் நீ
காரைப் பழித்த குழலாள் வள்ளியம்மை
தன்கணவனென வருபவனு நீ
காராழி மீதிலே மகரமாம் சோங்குடன்
கப்பலை உடைத்தவனும் நீ
பாரத்தனத்திலுமையாள் பெற்ற
புதல்வன் நீ பச்சை மால்
மருகன் நீ
பரிமளஞ்சோலை சூழ் கதிரையம்பதியில்
வாழ் பரிவுடைய தம்பிரானே.

ஸ்ரீ ஸ்கந்தா நமோ!

சுபம்!



ஸ்டான்காட் பிரிண்டர்ஸ் லிமிட்டெட், கொழும்பு-11


# அறிவிப்பு

முருக பக்த அன்பர்களே!
உங்கட்குத் தேவையா?
என்ன? என்று கேட்பீர்களாக்கும்!
வேறென்ன!

## கதிர்காம மான்மியம்

விலை ரூபா: 1, தபாற்செலவு சதம் /35

இலங்கையில் பிரதானமான எல்லாப் புஸ்தகசாலைகளிலும் கிடைக்கும்.

மொத்தமாகத் தேவையானவர்கள் கீழ்க்காணும் விலாசங்களிற் பெற்றுக் கொள்ளலாம்.

1. விலாசம்: அ. சி. சிவம்,
விவேகாநந்த வித்தியாலயம்,
34, மேட்டுத் தெரு, கொழும்பு-13

2. சரஸ்வதி புத்தகசாலை
173, செட்டியார் தெரு, கொழும்பு.




## தங்க நிறத்தைக் கண்டு ஏமாறுதீர்கள்!

நம்பிக்கையான சுத்த
தங்க நகைகளைத்
தயாரித்துக் கொள்வ
தற்கு எங்களிடம்
விஜயம் செய்யுங்கள்.

**பட்டக்கண்ணு கதிரவேலு ஆச்சாரி,**

96, புதுச்செட்டித் தெரு, கொழும்பு-13.

டெலிபோன்: 5118